# தென்மொழி

## தமிழ்த் தொண்டர் அறிந்திடுக!

எந்தமிழர் மொழிநலத்தைக் காக்கின்ருர்
எவரவரே எமக்கிங் காசான்;
எந்தமிழர் இனநலத்தைப் பேணுகின்ருர்
எவரவரே எமக்குத் தோழர்;
எந்தமிழர் உரிமைபெற உழைக்கின்ருர்
எவரவரெந் தலைவர்; என்றும்
எந்தமிழர் பழம்பெருமை மீட்கின்ருர்
எவரவர்க்கே தொண்டர் யாமே!

தமிழர்ஒரு தவறு செய்தால், தமைப்பெரிதாய்
எண்ணியதைத் தமுக்க டிப்போர்
நமிலிருப்பர்; நாமவரை இனங்கண்டு
நகல்வேண்டும்! நன்மை யெண்ணி
உமிமலையில் ஓரரிசி கண்டாலும்
அதைப்பொறுக்கி உயர்வு செய்யும்
அமிழ்தமனங் கொண்டவரே இனங்காப்பார்;
அவரையும்நாம் அறிதல் வேண்டும்!

தக்காரும் தகவிலரும் தம்செயலால்
தமில்தாமே உயர்வர்; தாழ்வர்!
பொக்காரும் சிற்சிலகால் மணியார்போல்
பொலிவிப்பர்; உணர்தல் வேண்டும்!
முக்காலும் முழுப்பொய்யை வாய்ச்சாக்கால்
மூடுவதும் முடியா தன்ருே?
எக்காலுங் குறையாத கொள்கை,வினை
எவர்க்குண்டோ அவரே எம்மோர்!

(தொடர்ச்சி 1-ஆம் பக்கம்)

சுவடி: 11
ஓலை: 3

விலை
75 காசு

கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

# நமக்கு வந்த மடல்கள்.

**0: 383:** பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பாவலர் அவர்களுக்குத் தங்களின் அறிவிலும் ஆற்றலிலும் நம்பிக்கை கொண்டவன் எழுதுவது. எந்தநிலையிலும் இனி நான் 'சாதி'ப் பெயரைக் கையாளுவதில்லை என முடிவு செய்து விட்டேன். இது வாயாலும் எழுத்தாலும் சொல்லப் படுவதன்று. என் கல்வித் தகுதிச் சான்றிதழ்கள் அனைத்தையும் தீயிலிட்டு எரித்துச் சாம்பலாக்கி விட்டேன். அதற்குச் சான்றாக என் பள்ளி விலகல் நூல் (S S.L.C. Book) முதற் பக்கத்தின் மேற் பகுதியை உங்களுககு விடுத்து வைத்துள்ளேன். நான் செய்த செயல் கிறுக்குத் தனமாகப் பிறருக்குத் தெரியலாம். ஆனால் உங்களுக்கும் அப்படித் தெரிந்தால்........நான் உண்மையாகவே கிறுக்கனாகி விடுவேன். முன்பு வந்த ஒரு தென்மொழியில் இன்றைய சூழ்நிலையில் தென்மொழி போலும் ஓரிதழ் செத்துக் கொண்டிருக்கும் நம் தமிழர்களுக்குத் தேவைதானா?" என்ற வினாவை எழுப்பியிருக்கிறீர்கள். அதற்கு நான் சொல்லும் விடை இதுதான்! என்னைப் போன்ற தமிழர்கள் இந்த இழிந்த தமிழகத்தை விட்டு மறைவதற்காவது-மானத்தோடு சாவதற்காவது நீங்கள் தென்மொழியை நடத்தத்தான் வேண்டும்! பத்துப் பன்னிரண்டாண்டுகள் தென்மொழியைத் தொடர்ந்து படித்தவர்களை இனி நம்பாதீர்கள்! அதைப் படித்து உணர்ந்து தெரிந்தவர்களை நம்புங்கள்! நாம் எள்ளுக்காக உழுத நிலத்தில் எவராவது கொள்ளை விதைத்தால் அந்தக் கொள்ளும் முளைத்தால்—அதே செடியை மடக்கி உழுது நாம் விதைக்கப் போகும் எள்ளுக்கு உரமாக்குவோம்! கவலை வேண்டாம்! மேற்கொண்டு எதையும் உங்களுக்குக் கூறுவதற்கு எனக்குத் தகுதியில்லை. எந்த நிலையிலும் 'தென்மொழி'யை நிறுத்தாதீர்கள்! அப்படி நிறுத்தினால் எங்களை ஆளாக்கிய நீங்களே எங்களைக் கொன்று குவித்தது போலாகும்.

—பொன்-மணிமொழி, வாழைக்குறிச்சி.

**0: 384:** தமிழகத்தில் முழு அளவில் தனித்தமிழில் வெளிவரும் இதழாம் தென்மொழி புதிய முறையில் வெளிவர இருக்கின்றது என்பதைக் கண்டு இங்குள்ள அன்பர்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டனர். நான் அகவையில் சிறியவன் என்றாலும் தங்களுக்கு ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். தங்கள் ஆசிரிய உரையில் எந்த கட்சியினரையும் தாக்காதீர்கள். ஆரியனாய் இருந்தாலும், தமிழ்ப் பகைவனாய் இருந்தாலும் அவர்களின் போக்கைத் தெளிவாக விளக்குங்கள்; தனிப்பட்டு அவர்களைத் தாக்காதீர்கள். தங்களிடம் உள்ள பெருங்குறை இதுவென யான் எண்ணுகிறேன். தென்மொழி வளராமல் உள்ளதற்கும் இதுவே காணியம எனலாம். பின் அவர்களுக்குத் தாழ்ந்து போக வேண்டும் என்பது என் கருத்தன்று. இன்று கட்சியின் சார்பு ஏடாக இருந்தால் கட்சியின்பின் செல்பவர்கள் பெருமளவில் வாங்குவார்கள். ஆனால் தாங்கள் நடுநிலை என்று கூறிக் கொண்டு-பலரையும் தாக்குவதால் தென்மொழிக்குத் தான் இழப்பு ஏற்படுகிறது. அதனால் அவர்களைப் புகழ்ந்து வெளியிட வேண்டும் என்று கூறுவதாக நினைக்க வேண்டாம். தென்மொழியும்

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]

(முகப்புப் பாடல் தொடர்ச்சி)

நந்தமிழர் நலம்பேணும் நாட்டமவர்க்
குண்டாயின் நாத்த டிந்து
செந்தமிழின் நலங்காப்பார் தமையொருவர்
சிறுமைசெய எண்ணு வாரோ?
வெந்தழியும் உள்ளத்தால் பிறருயர்வை
வியக்காமல் வெயர்ப்பார் தம்மை
எந்தமொழி யாலுயர்த்த...எந்தமொழி
யால்திருத்த...எண்ணு வோமே?

சொல்லெவர்க்கும் கைக்கு வரும்; மைக்குவரும்!
ஆனாலும் சொல்லுஞ் சொற்கள்
வல்லவரைக் காட்டிடுமோ, வினையல்லால்?
வருங்காலம் சன்மைக்கும் பாங்கில்
வெல்லவரும் பெரும்படையும் விரிசலுரின்
பகைக்கிங்கே வேறென் வேண்டும்?
நல்லவற்றைப் போற்றுங்கள்; அல்லவையோ
அவைதாமே நலிந்து போகும்!

செந்தமிழ்க்குத் தொண்டுசெய்ய வருவார்க்கொன்
றுரைத்திடுவேன்! "சிறப்போ தாழ்வோ
எந்தமுடி வானாலும் ஒருமுடிவோ
டிறுதிவரை இளைக்கா நெஞ்சும்—
சொந்த முனைப் பில்லாமல் அயல்நிலத்தில்
விளைத்தறுக்கா மானச் சூடும்—
வந்தவினை வெ:தெனினும் உவந்தேற்கும்
மனவலிவும்–வளர்தல் வேண்டும்!"

வினைவல்லார் இருப்பரெனின் அவர்திறத்தால்
தமிழ்காக்கும் வினையைச் செய்க!
புனைவல்ல சொல்திறமை உண்டென்று
பொய்புளுகு புனைதல் வேண்டா!
பனைவல்ல பெருந்திறலும் தினைப்பகையால்
பயனற்றுப் போதல் நன்றோ?
நினைவில்லை; பேச்சில்லை; செயலன்றோ
நெடுங்காலம் நிகழ்த்தல் வேண்டும்!

ஒருவினைக்கே நமக்கொருவர் ஒத்துவர
வில்லையெனில் ஒதுங்கிச் செய்க!
தெருமுனையார் பரிமாறும் சிறுசொல்லால்
மற்றவரைத் திட்டித் தீர்த்தல்

எருவினிலே நஞ்சுகலக் கின்றசெயல்!
　　எழுந்துபயிர் விளைதல் எங்கே?
பெருமுனைப்பால் பிறர்விளைவை எள்ளாதீர்!
　　பேருழைப்பே பெருமை சேர்க்கும்!

தீட்டுகின்ற மரத்தினிலே கத்தியின்கூர்
　　தேர்ந்திடுஞ்செய் நன்றி யின்மை
கூட்டுணர்வைக் குலைத்துவிடும்; இரண்டகத்தைக்
　　குருத்தவிழ்க்கும்; கூம்பச் செய்யும்!
காட்டுகின்ற நன்றியள வாமுயர்வு;
　　நன்றியற்றார் உய்தல் இல்லை.
பூட்டுகின்ற வாயினராய் அவரவர்தம்
　　புலமையினைப் பொலியச் செய்க!

எக்காலும் எல்லாரும் ஒன்றிணைதல்
　　எனுங்கொள்கை இயற்கை யில்லை;
திக்காலுக் கொன்றிரண்டாய்த் திரிபவரை
　　இணைக்குங்கால் தெரியும் உண்மை!
சுக்காலும் மிளகாலும் காரங்கள்
　　தனித்தனியாம்; சுள்ளி வேறாம்!
முக்காலோ அரைக்காலோ முடிந்தமட்டும்
　　இணைந்தவரை முனையச் செய்க!

நமக்கொருகால் வாய்ப்புளதென் றெருமுதுகில்
　　நாட்டியவாள் நம்மோர் வாங்கித்
தமக்கெருவாய் நம்முதுகில் தைக்கின்ற
　　நாள்வரவும் தயங்கி டாது!
கமுக்கமொடு செயுந்தீங்கும் வெளிப்படுதல்
　　காலத்தால் கனியுஞ் செய்கை!
நமக்குள் நாம் புறம்பேசித் தாழ்ந்திழியின்
　　இனப்பகைதான் நலிவ தெங்கே?

குன்றியள வெண்ணியதும் குன்றளவாய்ச்
　　செய்தவர்போல் கூறு வாரும்,
நன்றியறி வின்றித்தாம் ஏறிவந்த
　　அடிமரத்தை நறுக்கு வாரும்,
மன்றினிலே நிமிர்ந்துரைக்கத் திறனின்றி
　　மறைவினிலே மழுப்பு வாரும்,
இன்றினியும் தமிழினத்தி லிருக்குமட்டும்
　　எந்தமிழர்க் கேற்றம் இல்லை.

---

## பிழை திருத்தம்.

சென்ற இதழ் (சுவடி 11, ஓலை 2) முகப்பு (க்கடைசி)ப் பாட்டில் "இருநூறு நூற்றுண்டாக"—என்று பிழையாக அச்சாகியிருப்பதை "இருபது நூற்றுண்டாக"—என்று திருத்திக் கொள்க.



# தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

**சுவடி: 11 ஓலை: 3**

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

நளி தி. பி. ௨00௪ (நவ-திச-1973)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1 தமிழகம்.

# பெரியாரும் பிரிவினையும்!



சிலர் தாம் இருக்கும் இடத்தை நோக்கித் தம்மைச் சிறந்த அறிவுள்ளவர்களாகக் கருதிக் கொள்வது உண்டு. பிறர் என்ன கருதுகிறார்கள், கூறுகிறார்கள் என்றெல்லாம் எண்ணிப் பார்த்து, அதற்குத் தகுந்தாற்போல் விடையளிக்காமல், தாம் அதிகாரத்தில்–ஆட்சியில் இருக்கிறோம் என்ற தன்மையில் திருவாட்டி இந்திராகாந்தி சில நேரங்களில் விடை கூறுவதைப் பார்த்தால், நமக்கு அக்கருத்துத்தான் நினைவுக்கு வரும். பெரியார் ஈ.வே.இரா. வின் தொண்டுக்கால அளவு கூட, அகவை முதிராத இந்திராகாந்தியம்மையார், பெரியார்தம் இயக்கத்தின் கொள்கைகளையும் அவரின் அரிய தொண்டையும் மதிக்காமல் "அது வலுவற்ற ஓர் இயக்கம்" என்று கருத்துக்கு இயக்கத்தின் மெலிவு வலிவுகளை எடையிட்டுப் பேசியிருப்பது, அவர்

அறிவைப் புலப்படுத்தும் பேச்சாகப் படவில்லை; அதிகாரத்தைப் புலப்படுத்தும் பேச்சாகவே படுகின்றது. திருவாட்டி. இந்திராகாந்திக்கு முன்னறிவைவிடப் பின்னறிவே மிகுதி என்பதை அவரின் கடந்த கால அரசியல் போக்குகள் உறுதி செய்துள்ளன. அவற்றின் பட்டறிவுகளைக் கொண்டு அவர்தம் கருதுமுறைகளைத் திசைமாற்றிக் கொள்ள வில்லையானால் எதிர்கால அரசியல் அரங்கம் விரைந்து அவரை வெளியேற்றி விடும் என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனி, பெரியார்க்கும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். ஏறத்தாழ அறுபது, எழுபது ஆண்டுகளைப் பொதுத் தொண்டிலேயே கழித்து, வேறு யாரும் பெற்றிராத அளவு முதிர்ந்த பட்டறிவு பெற்றுள்ள அவர்களுக்கு, நாம் அவ்வகையில் புதிதாகச் சொல்லப் போவது ஒன்றுமில்லை யானாலும், கருத்து எங்கிருந்து வந்தாலும் அதனை எடையிட்டு ஏற்றுக் கொள்ளும் தேர்வு முறை பெரியாரின் அரிய பண்புகளில் ஒன்றாயிருப்பதால், இங்குக் கூறப் பெறும் இரண்டொரு கருத்துகளுக்கு அவர் செவிசாய்க்கக் கேட்டுக் கொள்கின்றோம்:

"அண்மையில் இந்திராகாந்தி தென்னகம் வந்திருந்த பொழுது தங்கள் இயக்கத்தை வலுவற்ற ஓரியக்கம் என்று கூறியதற்காக நீங்கள் வருந்தியிருக்க மாட்டீர்கள் என்றும், மாறாக அவரின் சிறு-பிள்ளைத் தனத்தைக் கண்டு நகைத்திருப்பீர்கள் என்றும் எங்களுக்குத் தெரியும். அரசியல் நிலையில் வலிவு மெலிவு என்பதற்குச் சரியான பொருளை இந்திரா காந்தி முற்றும் உணர்ந்திருப்பார் என்று சொல்ல முடியாது. இருப்பினும், ஒரு நூற்றாண்டு பழுத்த உங்களின் மூளைத் திறத்தை அவர் குறைத்து மதிப்பிட்டதில் உள்ள ஓர் உண்மை உங்கட்கு புலப்பட்டதோ இல்லையோ, எங்கட்கு வெளிப்படையாகத் தெரிந்தது. தமிழர்களின் ஒட்டு மொத்தமான கூட்டுணர்ச்சியையே அவர் காறி யுமிழ்ந்திருக்கின்றார். இவ்வகையில் உங்களுக்குத் தெரியாத தன்று. எத்தனை யாண்டுகள் நீங்கள் பட்டி தொட்டிகளி லெல்லாம் புகுந்து படாதபாடு பட்டிருக்கின்றீர்கள்; கருத்தைப் பரப்புவதற்காகக் கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் உங்கள் நடை ஓய்ந்ததா? ஆனாலும் என்ன பயனைக் காணமுடிந்தது? எந்தத் தமிழர்கள் நீங்கள் சொன்ன இன ஒற்றுமையைப் பேணி மதித்துக் காப்பாற்றிக் கொண்டார்கள்? உங்களையே ஒரு நேரம் கவிழ்க்க முயன்றவர்கள், உங்களைக் கவிழ்க்க முடியாது என்று அறிந்ததும் பாராட்டத் தொடங்கினார்கள். உங்கள் கருத்துகளால் பயன் பெற விருப்பமில்லாமலேயே உங்களுக்கு மாலை போட்டுப்

பாராட்டுபவர்கள் எத்தனைப் பேர்! இவர்கள் அனைவருடைய செயல்களையும் நீங்கள் நன்ருக அறிந்திருப்பீர்கள். ஆனுல் பயன் என்ன? நீங்கள் நினைத்த ஒற்றுமையைச் செய்ய முடிந்ததா? அவ்வொற்றுமையைக்கொண்டு வலிவான ஒரு போராட்டமேனும் நடத்த முடிந்ததா? நடத்தப் பெற்ற பலவகைப் போராட்டங்களும் முடிவில் தம் கொள்கையில் வெற்றி பெற்றனவா? இல்லையே, ஏன்? நீங்கள் மட்டுமில்லை. இவ்வகையில் எவர் முயன்ருலும் இத் தமிழர்களிடையே வெற்றி பெறப் போவதில்லை என்பதே அழிக்க முடியாத உண்மையாகும். பின் முடிவுதான் என்ன?

அதைப் பற்றித்தான் நான் [பட்டறிவிலும் அகவையிலும் எத்தனையோ மடங்குச் சிறியவனுன நான்], உங்கட்கு [பொதுத் தொண்டில் முக்கால் நூற்ருண்டைத் தாண்டிய உங்கட்கு]ச் சொல்ல விரும்புகின்றேன்:

ஐயா, வாழ்வின் இறுதிப் படிக்கட்டுகளில் நின்று கொண்டிருக்கின்றீர்கள். இன்றுவரை உங்கள் கொள்கைகளையே அழுத்தந் திருத்தமாகப் பேசிப் பேசியே—எழுதி எழுதியே—நரை, திரை, முதுமை, இயலாமை, நோய்மை முதலிய அத்தனை முத்திரைகளையும் பரிசாகப் பெற்று விட்டீர்கள். இனி இந்த நிலைக்கு அடுத்த நிலை என்னென்பதும் உங்கட்குத் தெரியும்? எதற்காக இனிமேலும் நீங்கள் உங்கள் கொள்கைகளை நிறைவேற்ற மக்களை எதிர்பார்த்துக் கொண்டு கிடக்க வேண்டும். அவர்கள் வருகின்ருர்களா இல்லையா என்று திரும்பிப் பார்க்க வேண்டும்? உங்கள் கொள்கையின் போக்குகளை அவர்களின் சேர்க்கைக்கு ஏற்ப நாளுக்கு நாள் மாற்றிக் கொள்ள வேண்டும்? உங்களுக்கு ஒரே நோக்கந்தான். அதிலிருந்து நீங்கள் என்றும் மாறுபட்டதில்லை. பின் ஏன், இவர்களுக்காக இவர்களின் நன்மை தீமைகளுக்காக, உங்கள் உயிரின் ஏக்கத்தை அடைத்துக் கொண்டு "நான் பிரிவினை கேட்கவில்லை" என்று மழுப்பிப் பேச வேண்டும்? அதனுல் என்ன நன்மை வந்துவிடும் என்று நீங்கள் கருதுகிறீர்கள். இப்படிச் சொல்வது ஒருவகை அரசியல் தந்திரமென்று நீங்கள் கருதலாம். இனிமேலும் எதற்கு உங்களுக்குத் தந்திர மந்திரமெல்லாம்? இவற்றை யெல்லாம் அறவே விட்டுவிட்டு, ஒரு நொடி எண்ணிப் பாருங்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் அனைவரும் உங்கள் 'பிரிவினை'யைத்தான் எதிர்பார்த்து நிற்கின்ருர்களே தவிர, நாட்டுப் பிரிவினை பற்றியோ மக்கள் விடுதலை பற்றியோ அவர்கள் கவலைப் படுவதாக எங்களுக்குத் தெரியவில்லை.

எப்படியும் தமிழகம் பிரிந்தாக வேண்டும். அவர் இந்திராகாந்தியானுலும் அல்லது மகாத்மா காந்தியானுலும் கூட இனி அந்தக்

கருத்தை முறியடிக்க முடியாது. தமிழகம்பிரியவில்லையானால் தமிழ் நாட்டுக்கும், தமிழனுக்கும், தமிழ்மொழிக்கும் முன்னேற்றமே இல்லை. வெறும் அரசியல் வாய்ப்பந்தல்காரர்களால் அதன் மெய்ப்பாட்டைப் பொய்யாக்கி விட முடியாது. இங்கும் யாகியாக்கான், ஆயூப்கான் போன்ற கருத்தாளர்கள் உண்டு. முசிபுர் இரகுமான் போலும் விடுதலை உணர்வுள்ளவர்களும் உண்டு. ஆனால் அவர்களைப்பற்றி யெல்லாம் இனி, நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டாம்.

இறுதியாகச் சொல்கின்றோம். உங்கள் கழகத்திற்கு மட்டுமில்லை; உங்கள் கொள்கைக்கும் நீங்கள் ஒருவர்தாம் தலைவர், செயலாளர், தொண்டர்—எல்லாரும். நீங்கள்தாம் அதைச் செயற்படுத்தியாகல் வேண்டும். 'நான் பிரிவினைதான் கேட்கின்றேன். தமிழ்நாடு தனியாகப் பிரிந்துதான் ஆக வேண்டும்' என்று கொட்டை எழுத்துகளில் விடுதலையில் ஓர் அறிக்கை விட்டுவிட்டு, ஒரு போராட்ட நாளைக் குறியுங்கள். அப் போராட்டம் எதுவாகவும் இருக்கலாம். அதைப் பற்றி யாரும் கவலைப் பட மாட்டார்கள். விளைவு நீங்கள் சிறையில்! உங்கள் முடிவு சிறையில்! உங்களைத் தொடர்ந்து உண்மையான செயல்மறவர்கள் எத்தனைப் பேர் பின் தொடர்ந்து வருகின்றனர் என்பதை இந்திராகாந்தி எண்ணிக் கொள்ளட்டும்! இந்த நாடு எண்ணிக் கொள்ளட்டும்!! எப்படியும்...இன்றன்று ...இன்னும் நூறாண்டுகள் கழித்தேனும் தமிழகம் மொழியால், இனத்தால், நிலத்தால் விடுதலை பெறுவது உறுதி! உறுதி!! உறுதி!!!'



## ஆசிரியரின் மலைநாட்டுச் செலவு!

'தென்மொழி' ஆசிரியர் பெருஞ்சித்திரனார் வரும் திசம்பர் இறுதியில் மலையா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சுற்றுச்செலவு மேற்கொள்ள விருக்கின்றார்கள். எனவே, ஆங்குள்ள அன்பர்கள் ஆசிரியரின் நிகழ்ச்சிகள் ஏற்பாட்டிற்கு முன் கூட்டியே தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர், தென்மொழி.

பக்க மாற்றம்.
24–ஆம் பக்கத் தொடர்ச்சி 47–ஆம் பக்கம்.

# ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்!-6

**ஆ**ரியரை இந்தியாவுக்கே உரிமையாக்கி, இந்தியாவை ஆரியர்க்கே உரிமையாக்கிப் பேசும் உணர்ச்சி பாரதியாரிடம் நிறைய இருந்திருக்கின்றது. ஆரியர் என்றால் அவர்களிடம் ஒரு தனித் தன்மை, சிறப்பு, எல்லாருக்கும் உயர்வான ஒரு தேவப் பெருமை இவையெல்லாம் இருப்பனவாகக் கற்பனை செய்து கொள்ளும் மனநிலை அவர் பாடல்களில் ஒலிக்கின்றது. இந்தியப் பண்பாடு, நாகரிகம், வீரம், சமயம் முதலிய அனைத்துப் பண்புகளையுமே அவர் ஆரியமாகப் பார்க்கின்றார். அப்பண்புகள் குறைந்தவரை அவர் ஆரியரினும் தாழ்ந்தவராகப் பேசுகின்றார்.

''ஆரியத் தன்மை அற்றிடுஞ் சிறியர்
யாரிவண் உளர்? அவர் யாண்டேனும் ஒழிக!''
''ஆரியர் இருமின் ஆண்களிங் கிருமின்;
வீரியம் மிகுந்த மேன்மையோர் இருமின்''

—என்று பலவாறாக ஆரியர்களையே-அல்லது அவரைச் சார்ந்தவர்களையே இந்நாட்டுக் குடிமக்களாக எண்ணிக் கொண்டு அவர் யாக்கும் வரிகள் இங்குள்ள எல்லாப் பிரிவினர்களையும் இழிவு செய்வதாகும். வரலாற்றடிப்படையில் இந்நாட்டுக்கு உரிமையான ஓரினம் உண்டென்னும் ஒரு கருத்தை அவர் அடியோடு மறுப்பதாகவே இவ்வரிகள் அமைகின்றன.

தமிழ்மொழியைப் பாராட்டுகையிலும், அஃது ஆரியச் சார்புடையதனால்தான் பெருமை கொண்டு விளங்குகின்றது என்னும் பொருள்படவே எழுதுகின்றாரே தவிர, அதன் தனித்தன்மை. பழமைச்சிறப்பு, தாய்மை நிலை; வளமைக் கொழிப்பு முதலியன நிறைந்திருக்கும் தன்மையை அவர் ஒப்புக்கொள்வதில்லை. ஆதிசிவன் பெற்ற தமிழை ஆரிய மைந்தன் அகத்தியன்தான் சிறப்புறச் செய்தான் என்பது பாரதியார் கருத்து. ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தது கி.மு. 1500–இலிருந்து 2000—க்குள் எனக் கூறலாம். அவர் தென்னாடு வந்தது அதற்குப் பின்னர்தான். அக்காலத்திற்கு முன்பே தமிழ் மிகவும் சிறப்புற்று விளங்கியிருந்தது. அவர்கள் தென்னாடு வந்த பின் அஃதாவது கடைக் கழகக் காலத்திற்குப் பின்னர்தான் தமிழ் மொழி, தமிழ் நாகரிகம், தமிழர் பண்பாடு முதலிய யாவும் சிதையத் தொடங்கின. இவர்கள் கூறிப் பெருமைப்படும் சமசுக்கிருத மொழி

அதன் பின்னர்தான் செயற்கையாக உருவாக்கப் பெற்றது. இந்த வரலாற்று நிலைகளையெல்லாம் உணராமல் அல்லது உணர்ந்தும் ஒப்புக் கொள்ளாமல் அல்லது ஒப்புக் கொண்டும் அவற்றை அடியோடு மறைக்கின்ற முயற்சியில், தமிழ்த்தாய் உரைப்பதாகப் பாரதியார் இப்படி எழுதுகிறார்.

"ஆதிசிவன் பெற்று விட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.

அகத்தியர் அகத்தியம் என்னும் இலக்கணத்தையும் நாரதர் பஞ்ச பாரதீயம் என்னும் இசைத்தமிழ் இலக்கண நூலையும் இயற்றியது உண்மைதான். தமிழில் ஏற்கனவே இருந்த நூல்களை ஒட்டியும் தழுவியுமே அந்நூல்கள் எழுதப் பெற்றன. அவ்வாறு செய்தது தம் ஆரியக் கருத்துகளை தமிழ்மொழியின் மூல நூல்களான இலக்கண நூல்களிலேயே நுழைத்தற்கு வேண்டியே தவிர, தமிழை வளர்க்க வேண்டியன்று. இம்முயற்சி இக்காலத்தும் நடந்து வருகின்ற வெளிப்படையான முயற்சியாகும். தஞ்சை 'சரசுவதி மகாலில்,' பழைய ஓலைச் சுவடிகளைப் பெயர்த்தெழுதுகின்ற முயற்சியில், இவ்வாறு பழந்தமிழ்ச் சுவடிகளினின்று வடமொழியில் பெயர்க்கப் பெற்றபின், அச்சுவடிகளையே அழித்து விடுகின்ற இரண்டகச் செயல் இன்றும் நடந்து வருவதாக அங்கிருந்து பணி யாற்றிய புலவர்களே அறிவிக்கக் கேட்டிருக்கின்றோம். இந்தக் கொடுமை மாந்தன் நிலாக்கோளில் இறங்கிய காலத்தும் துணிவாக வும் சூழ்ச்சியாகவும் நடைபெறுகின்றதெனில் அக்காலத்தில் நடை-பெற்றிருக்க முடியாதென்று ஒரு கருத்துக் குருடனும் ஒப்ப மாட்டான். மேலும் உ.வே. சா. போலும் பாரதியார் போலும் தமிழ்த்-திறமும் ஈடுபாடும் கொண்டவர்கள் வாயிலிருந்தே இத்தகைய கருத்து வருவதற்கு வேறு பக்கவலிவுகளே தேவையில்லை.

அவ்வாறு அகத்தியர் போன்ற ஆரிய முனிவர்கள் தமிழ் இலக்கணம் செய்த பின்தான் தமிழ்மொழி ஏற்கனவே உயர்ந்து விளங்கிய ஆரியமொழியான சமசுக்கிருதத்திற்கு நிகராக விளங்கியதாம். பாரதியார் கருத்திது. நம்புபவர்கள் எத்தனையோ பேர் இருப்பர்.

"ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்"

அன்பு

திருவள்ளுவரியாண்டு 2004

*நளித், *கழை நாண்மீன் புணர்ந்த

*சுறவ

ள்

ற்றமிழ்நங்கை

ானும்

ந்தி

ர்கள் செல்வமகள்)

ஆகிய ஞ திருமண மண்டபத்தில்"

தனித்தறை ஓதச் சிறப்புற நிகழும்.

அத் திருறையருளொடு வாழ்த்தியருள

வேண்டு

வங்கடகிரி

பரியதந்தை)

ணி.

கலைக்

–என்பது அவர் கூற்று. இப்படி எழுத பாரதியார் வரலாறு தெரியாதவராக இருக்க வேண்டும்; அல்லது வரலாற்றை மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். எளிய புலவர்கள் இவ்வாறு உண்மைக்கு மாறாக எழுதினாலும் பாரதியார் போலும் ஓரளவு சிறந்து விளங்கிய தேசியப் புலவர்கள் இவ்வாறு கற்பனைகளை உண்மைபோல் எழுதுதல் கூடாது. இப்படி எழுதுவதால் வரலாறு சிதைக்கப் பெற்று, உண்மை நிலைகள் உணரக்கூடாமற் போய் விடுகின்றன என்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். பாவலர்களும் இதற்கு நெறிவிலக்கினர் அல்லர். அவர்கள் கற்பனை வரலாற்றைத் தழுவிய கற்பனையாக இருக்க வேண்டுமே தவிர, வரலாற்றுக்கு மாறான கற்பனையாக இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் அத்தகைய கற்பனைகளால் எதிர்காலம் சிதைக்கப்படும் என்பதை உணர்தல் வேண்டும்.

இனி, தமிழர் தமிழ்மொழி சிறந்தது, உயர்ந்தது என்று பாராட்டிப் புகழ்ந்து எழுதுவதைப் போல், பாரதியாரும் ஆரிய மொழியையும் ஆரிய இனத்தையும் அவ்வாறு எழுதியிருக்கக் கூடாதா என்று சிலர் கேட்கலாம். பாரதியார் அவர் இனத்தையும் மொழியையும் எவ்வளவு உயர்வுக்கேனும் தூக்கட்டும். அதைப்பற்றி எவருக்கும் கவலையில்லை. ஆனால் அதை வரலாறாக்கக் கூடாது. அவர் தூக்கிப் பேசுகின்ற தன்மை இன்னொரு மெய்ப்பாட்டுடன் ஒப்பிட்டுப் பேசப் பெறுகையில்தான் வரலாறு சிதைக்கப் பெறு கின்றது. இந்திய வரலாற்றுச் சிதைவுக்கு ஆரியரின் இந்தக் குழப்ப நிலைகளே காரணியங்கள். அவர்களின் தொன்மங்களிலும், தொல் கதைகளிலும் உள்ள அரசர் பெயர்களில் சிலவும், நிகழ்ச்சிகளில் சிலவும் உண்மையே! ஆனால் அவ்வுண்மையைச் சார்ந்தவாறு பொய்ம்மைகளும் புளுகுகளும் நிரம்பப் படைக்கப் பெற்று அவற்றுள் இணைக்கப் பெற்று விட்டன. எனவே உண்மையெது பொய்யெது என உணரமாட்டாமல் வரலாற்று மயக்கங்களும் குழப்பங்களும் ஏற்பட்டு, மக்களை பல்வேறு உணர்ச்சிகளுக்கு உள்ளாக்குகின்றன. மற்ற நாடுகளைவிட இந்தியாவில் இந்நிலைகள் மிகுதி. அதற்குக் காரணியம் ஆரியப் பூசல்களே!

பாரதியாருக்கு ஆரியவுணர்ச்சி அளவிறந்து இருந்ததுடன் வேதங்களே இந்திய நாட்டின் உயர்வுக்கு அடிப்படையானவை என்னும் மூடக் கொள்கையும் மிகுதியாக விருந்தது. வேதங்களைப்

பழிப்பவர்களை 'வெளித்திசை மிலேச்சர்' என்று இழித்தும் அயன்மைப் படுத்தியும் கூறுகின்றார். மற்றும்,

"தெள்ளிய அந்தணர் வேதம்" —என்றும்,

"ஓதுமினோ வேதங்கள்
ஓங்குமினோ! ஓங்குமினோ!" —என்றும்,

"பன்னரும் உபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல்இது போலே?"—என்றும்,

"நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை யாள்!"—என்றும்,

அவள், "வேதங்கள் பாடுவள் காணீர்—உண்மை
வேல்கையிற் பற்றிக் குதிப்பாள்" —என்றும்,

"வேதங்கள் சொன்ன படிக்கு மனிதரை
மேன்மையுறச் செய்தல் வேண்டுமென்றே"
—என்றும்,

"மீட்டுமுனக் குரைத்திடுவேன் ஆதிசக்தி
வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தி"
—என்றும்,

"வேதமுடைய திந்த நாடு—நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு;
சேதமில் லாத ஹிந்துஸ் தானம்—இதைத்
தெய்வமென் று கும்பிடடி பாப்பா"—என்றும்.

அவர் வேதப் பெருமைகளாகக் கூறுபவையெல்லாம் ஆரியத்தின் பெருமைகளைப் பறைசாற்றவே கூறியவையாகும். வேதங்களை மட்டுமின்றி ஆரிய நூல்கள் அனைத்தையும் பாராட்டும் வகையில்,

"அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிகளாலே
பன்னிநீ வேதங்கள், உபநிடதங்கள்,
பரவுபுகழ்ப் புராணங்கள், இதிகாஸங்கள்
இன்னும்பல் நூல்களிலே இசைத்தஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனைஇந்நாள்?"

என்று பலவாறாக உண்மைக்கு மாறாகக் கட்டி உரைப்பது, அவர் ஆரிய மதிமயக்கத்தினின்று விடுபடவில்லை என்பதையே காட்டுவதாகும். மேலும் இவரைப் பற்றியும் இவர் எழுதியுள்ள கதைகள்

கட்டுரைகள் முதலியவற்றில் உள்ள ஆரியக் கருத்துகள் பற்றியும், இன்னும் பிறர் பற்றியும் கூறுவதென்றால் இக்கட்டுரை அளவிறந்து நீளும என்பதால் இக்கருத்துரைகளை இவ்வளவில் நிறுத்திக் கொள்வோம்.

மொத்தத்தில் நாம் குறிப்பிட வந்தது, ஆரியப் பார்ப்பனர்கள் தமிழ் நிலையிலாயினும் சரி, குமுகாய நிலையிலாயினும் சரி, அரசியல், தொழில், சமயம் முதலிய எந்த நிலைகளிலாயினும் சரி, அக்காலத்திலிருந்து இக்காலம்வரை, தமிழர்களுடன் இரண்டறக்கலந்து உறவாடவில்லை என்பதையும்; அவர்கள் தவிர்க்க வியலாத நிலையில் தமிழ் நாட்டில் தமிழர்களிடையில் தமிழர்களைப் போன்றே வாழ நேரிட்டாலும், அவர்கள் மனநிலையில் எவ்வகை மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்பதையும்; அவர்கள் இன்றும் தங்களை உயர்ந்தவர்களாகவும், தங்கள் மொழியையே தேவமொழி அதுவே உலகிற்கு மூலமொழியென்று நம்புபவர்களாகவும், அப்படி நம்பச் செய்பவர்களாகவும், அப்படி நம்புகின்ற பிற இனத்தவரையே தாங்கிப் போற்றிக் கொள்பவர்களாகவுமே இருக்கின்றார்கள் என்பதையும்; அந்த நிலைகளுக்கு உ. வே. சாமிநாதர் போலும் தமிழறிஞர்களும், பரிதிமாற்கலைஞர் போலும் தனித்தமிழ் வழிகாட்டிகளும், பாரதியார் போலும் பாவலர்களும் கூட விலக்கல்லர் என்பதையும் உணர்த்த வேண்டியே ஆகும்.

இறுதியாக, இவர்களின் இனவுணர்வு மிகவும் பாராட்டக் கூடியதாகும். இவர்களுக்குள்ளே இன்னொருவரைப் போற்றிக் கொள்ளும் தன்மையால்தான் இவர்கள் சிறிய அளவினராயிருப்பினும், இவரின் தனித்தன்மைகளை இன்று காறும் எவராலும் அழிக்க முடியாமல் இருக்கின்றது. இவர்களைப் பார்த்துப் பிற இனத்தினர், குறிப்பாகத் தமிழர் தெரிந்து கொள்ள வேண்டிய—பின்பற்றக் கூடிய தன்மைகள்—பண்புகள் மிகுதியாகும். தாய்மொழிப்பற்று, இனப்பற்று, தன் இனத்தாரைப் பேணிக்கொள்ளும் தகைமை, தம்முள் ஒருவர் எவ்வளவு தாழ்ந்திருந்தாலும் அவரைப் பழித்துரையாமையும், காட்டிக் கொடாமையும், பிறருடன் ஒத்துப் போக வியலாவிடத்துப் பழி கூறாமல் ஒதுங்கிவிடும் தன்மை, எந்த நிலையிலும், எவ்விடத்தும் தன் இனத்தவனைப் போற்றிக் கொள்ளும் தன்மை, உண்மையான திறமையுள்ளவனை மனம் விட்டுப் பாராட்டிப் பெருமை செய்யும் பரந்த பண்பு முதலிய அருங்குணங்களே

ஓரினத்தை ஒட்டுமொத்தமாக உயர்த்துவனவும், காக்கின்றனவுமான வலிந்த கருவிகளாகும். அக்கருவிகள் இவ்வாரிய இனத்தாரிடம் இன்றளவும் காப்பாக வைக்கப்பெற்றுப் பேணப்பெற்று வருகின்றன. தமிழர்களிடம் இவற்றுக்கு நேர்மாறான இழிந்த தன்மைகள் மிகப் பலவாகும். இவை பண்டைத் தமிழரிடம் இருந்தனவாகக் குறிப் பில்லை. இடையிடையே வந்த வேற்றினத்தவரிடமிருந்து கற்றுக் கொண்ட தீய் பண்புகள் இவை. பன்னாடைக்ள் போல் நல்லனவற்றை விட்டு விட்டு அல்லனவற்றை—தமக் கொவ்வாதனவற்றைத் தக்க வைத்துக் கொள்ளும் தன்மை தமிழினத்தின் கள்ளங் கவடற்றப் போக்கால் ஒட்டிக் கொண்டதாகும். இவ்விழி தகைமைகளை அறவே விலக்கினால்தவிர தமிழர் முன்னேற்றம் என்பது இந்தத் தலைமுறை யில் மட்டுமன்று, இனி எந்தத் தலைமுறையிலும் கருதிப் பார்க்க முடியாத வொன்றாகும். இந்த மனமாற்றத்தை வலிந்தேனும் தமிழர்கள் உருவாக்கிக் கொள்ளவே இக்கட்டுரைக் கருத்துகள் பயனளிக்க வேண்டும். மற்றபடி ஆரியப் பார்ப்பனர்மேல் நமக்கு எவ்வகை வெறுப்பும் இல்லை. அவர்களை மட்டுமன்று எத்திறத்தின ரையும் நம்மவர்களாக ஏற்றுக் கொள்ளும் பண்பில் தமிழர்கள் யாருக்கும் தாழ்ந்தவர்களல்லர். ஆனால் அதன்பொருட்டு, தங்கள் இனத்தை வேண்டுமென்றே தாழ்த்திவைக்கும் நிலைக்கு—மிகவும் சிறந்ததும் உலகமொழிகளுக்கே தாயானதுமான தங்கள் மொழியை இழித்து ஒழிக்கப்படும் நிலைக்கு—தமிழர்கள் தங்களை இனியும் ஆளாக்கிக் கொள்ளக் கூடாது. தமிழர்களின் இம் முயற்சியை ஆரிய இனம் மட்டுமன்று, உலகின் அனைத்து இனங்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அவர்களாக உணராவிடத்து, தமிழர்கள் எவ்வகையானும் இதனை உணர்த்த—பறைசாற்றச் சிறிதும் தயங்கக் கூடாது.

தமிழர்க்கென்று ஒரு தனிமொழி; தனிப் பண்பாடு; தனி நாகரிகம்; தனி நாடு என்பன என்றும் உண்டு. அவற்றை வலி யுறுத்துவதே தனித்தமிழியக்கத்தின் கொள்கை. அவை ஊறு—படுத்தப் பெறுங்கால், அல்லது சிதைக்கப் பெறுங்கால் அந்நிலை களால் ஏற்படும் எதிர் விளைவுகளைத் தொடர்புள்ள அனைவருமே எண்ணிப் பார்க்க வேண்டுமே யல்லாமல், தமிழர் மட்டுமே எண்ணிப் பார்க்க வேண்டும் என்பது நடுநிலையற்ற—ஒரு சார்பான—ஓரினத்தை

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம்)



# நூறாசிரியம்.

பெருஞ்சித்திரன்.

பாட்டு: ௧௧.

யாங்கோய் வாளோ தூங்குபிற் றூங்கி
ஆங்குமுற் புலர்ந்து வாழில் வினைந்து
பனிநீர்க் கொண்டு மணியுடல் மண்ணி
குனிநுதற் பளிங்கிற் குங்கும மிலங்க
எமைவிழிப் பித்தெஞ் சிறாரை எழுப்பி
அமைய வுதவி இமையும் ஓயாது
அடுக்களை வெம்பணி அலர்முகத் தலைந்தே
உடுக்கை வெளிற்றிப் பீறல் ஓட்டிச்
சாயல் ஞான்றொளி யேற்றியுண் டுவந்து
பாயல் வீழ்ந்தெமைப் பற்றி யோளே!

பொழிப்பு:

எவ்விடத்து ஓய்ந்திருப்பாளோ, முன் இரவில் யாம் தூங்கிய பின் தூங்கி, அவ்வாறே மறுநாள் வைகறையில் எமக்கு முன்னதாகக் கண் விழித்து எழுந்து, வாழ்கின்ற அகத்தையும் புறத்தையும் விளையால் தூய்மை செய்து, குளிர்ந்த நீரைக் கொணர்ந்து தன் அழகிய வுடல் குளித்துப், பளிங்குபோல் ஒளிசான்ற வளைந்த நெற்றியில் குங்குமம் விளங்கும் முகத்துடன், எமை விழிப்புறச் செய்து, எம் மக்களைத் துயில் களையச் செய்து, யாவர்க்கும் அவரவர் வினைகளுக்குப் பரிவு கலந்த அன்புடன் துணையாக நின்று, இமைப் பொழுதும் ஓய்வு கொள்ளாது, அடுக்களையின் வெம்மை நிறைந்த பணிகளில் மலர்ந்த முகத்துடன் அலைவுற்றுப் பிற்பகலில் அழுக்கடைந்த உடைகளை வெளுத்துத் தூய்மை செய்து, கிழிந்தவற்றைத் தைத்துச் சாயுங்காலப் பொழுதில் விளக்கம் ஏற்றி, இராவுணவு உண்பித்துத் தானும் உண்டு, எல்லாருடனும் பேசி மகிழ்ந்து மீண்டும் படுக்கையில் வந்து வீழ்ந்து எம்மைக் காதலால் பற்றிக் கொண்ட தலைவியாகிய இவளே!

விரிப்பு:

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

கற்புக் காலத்துத் தலைவியின் ஓயாத இல்லறப் பணிகளைக் கூர்ந்து நோக்கிய தலைவன், அவள் அவற்றை அமைதியுடனும் மகிழ்வுடனும் மிகுந்த பொறுமையுடனும் செய்வதையும், அவற்றுக் கிடையில் அவள் சிறிதும் ஓய்வின்றி இயங்குவதையும் கண்டு வியப்பும் இரக்கமும் மேலிட, தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லி, அத்தகைய அவளைப் பெற்றமைக்காகப் பெருமிதம் கொண்டதாக அமைந்ததிப் பாட்டு.

யாங்கு ஓய்வாளோ: எவ்விடத்து எவ்வகையில் ஓய்வு கொள்-வாளோ? இரக்கவுணர்வால் பாட்டின் முதலாக நின்றன இச்-சொற்கள்!

தூங்கு பின்: தூங்கிய பின். இறந்த காலத்தை உணர்த்தியது.

ஆங்கு: அவ்வாறே. பொறுப்புடன் எல்லாரையும் தூங்கச் செய்த பின் தூங்கியவள், அதே பொறுப்புடன் எல்லார்க்கும் முன்னே எழுந்ததைக் குறிப்பிட்டது.

வாழில்: வாழ்தல் செய்கின்ற இல்லத்தை.

வினைந்து: வினையைச் செய்து.

கொண்டு: போய்க் கொணர்ந்து.

மணியுடல்: அழகிய வுடல். இல்லறப் பணிகளால் அவளுடல் துயர் கொள்வதைப் பொறுத வுளத்துடன் வெளிப் போந்ததாகும் இச்சொல். 'இவ்வழகிய வுடலை அவள் ஓய்வின்றி அலைவு செய்கின்றாளே' —என்று காதலாற் கசிந்தது.

மண்ணி: கழுவி. மணியுடல் என்றதால் மண்ணி என லாயிற்று. அவள் உடல் வருத்தமுறாது இருத்தல் வேண்டும் என்னும் குறிப்புத் தோன்றக் கூறியது.

குனிநுதல்: வளைந்த நெற்றி.

பளிங்கில்: பளிங்குபோல் ஒளிபொருந்திய நெற்றி.

குங்குமம் இலங்க ஏமை விழிப்பித்து: தான் கண்விழிக்கையில் தன் முன் அவள் குளித்து முழுகிய தோற்றத்துடனும், குங்குமம் விளங்கும் நெற்றியுடன் கூடிய மலர்ந்த முகத்துடனும் நிற்பது, தலைவன் உள்ளத்தில் அவளுக்கொரு பெருமையைத் தோற்றியது. தட்டியோ, அழைத்தோ எழுப்பாமல், நெருக்கமாய் அருகில் நின்றே கையால் மெதுவாகத் தீண்டியோ, நீவியோ, அவன் தானே விழிப்-புறும்படி செய்தாள் என்க.

அவள் தன்மேல் கொண்ட அன்பையும் மதிப்பையும் அவன் உணர்ந்து வியந்தது குறிப்பால் நின்றது.

சிறுரை எழுப்பி: தம் குழந்தைகளை உலுப்பியோ, கூவியோ விழிப்புறச் செய்தாள் என்றபடி.

இங்குத் தலைவனை விழிப்புறச் செய்தபின் அவள் அவ்வாறு செய்ததும், அதற்கு முன் செய்யாமையும், பிள்ளைகளை எழுப்பும் அரவத்தான் தலைவன் திடுக்கிட எழக்கூடாதே என்னும் அவள் மனக்குறிப்பை உணர்த்திற்று

பெரும்பாலும் மிகு காலையில் எழும்பொழுது நிற்கும் உள்ள உணர்வே அன்றைப் பொழுது முழுவதற்கும் அடிப்படையாக அமைவதாகலின், ஒருவரைத் துயிலினின் றெழுப்புகையில் மற்றவர் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் என்னும் குறிப்பை உணர்க.

அமைய வுதவி: அவரவர் பணிகளில் அமைதியுடன் உதவி-யாக நின்று.

இமையும் ஓயாது: இமைப் பொழுதும் ஓய்விலாது.

அடுக்களை வெம்பணி: சமையலறையின் வெப்பம் நிறைந்த பணி.

அலர்முகத்து அலைந்து: மலர்ந்த முகத்துடன் அலைவுற்று. வெப்பம் மிகுந்த சூழலிலும் தன் மலர் முகம் வாடாது கடமை-யாற்றும் அவள் மனப்பாங்கை வியந்தது.

வெளிற்றி: அன்றுடம் அழுக்கடைந்த உடைகளைத் துவைத்து வெளுத்து.

பீறல் ஓட்டி: சிறு சிறு கிழிசல் அடைந்த உடைகளைத் தைத்து இணைத்து. தையலை நூலால் ஓட்டுதலால் ஓட்டி எனப் பெற்றது.

சாயல் ஞான்று: சாயுங்காலப் பொழுதில்.

ஒளி யேற்றி. விளக்கம் ஏற்றி.

உண்டு உவந்து: உண்டு முடித்து அன்றுடப் பணிகளால் மனத்திரிபுறுது, எல்லாருடனும் இணைந்து மகிழ்ந்து.

**பாயல் வீழ்ந்து எமைப் பற்றியோளே!** அவள் படுக்கையில் சேர்வதற்கு முன்பே தலைவன் அதில் படுத்திருந்தது, '**வீழ்ந்து எமைப் பற்றினுள்**' என்னும் குறிப்பால் உணர்த்தப் பெற்றது. தலைவனைத் தலைவி பற்றுதல் காதற்குறிப்பாய் அமைந்தது.

'பற்றியோள், யாங்கு ஓய்வாளோ' என்று இணைக்க.

இப்பாடலைத் தலைவன், தலைவி தன்னை இராப்படுக்கையில் பற்ற வந்த நேரத்து, அவளை அன்பூற ஆறுதலுடன் அணைத்தவாறு நினைத்துக் கொண்டதாகக் கொள்க.

"நேற்று இராப்பொழுது என்னோடிருந்து, யான் தூங்கியபின் தூங்கி, வைகறையில் எனக்கு முன்னரே எழுந்து தலைவியாக நின்று, இல்லறப் பணிகளில் மலர்ந்த முகத்துடன் அலைவுற்றுத் தாயாகி என்னையும் மக்களையும் புரந்து பேணி, மீண்டும் இவ்விராப் பொழுதில், இளமைக் காலத்தின் காதல் குறையாத உள்ளத்துடன் வந்து என் தோளைப் பற்றுகின்ற இவள்தன் பணிகளுக்கிடையில் எவ்வாறு எவ்விடத்து ஓய்வாக அமர்கின்றாள்? இல்லையே" என்று வியப்பொடு இரக்கமுற்றுப் பெருமிதத்துடன் அணைத்துக் கொண்டான் தலைவன் என்க.

இது முல்லைத் திணையும், கற்புக் காலத்துத் தலைவியை வியந்து தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லிய தென்னுந் துறையுமாம். O

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றோர் இனம் அழிக்கின்ற—அழிவுக் கொள்கையாகும். அந்நிலையை எத்தகைய மாந்தஉணர்ச்சி யுள்ளவனும்—அல்லது அவ்வுணர்ச்சி யுள்ள எந்த ஓரினமும் பொறுத்துக் கொள்ள முடியாது. பிறிதோரினத்தினும் தங்களை ஓரினம் உயர்த்திக் கொண்டு பேசுவது, எழுதுவது, நடப்பது; மற்ற இனம் அதைப் பொறுத்துக் கொண்டு—தான் கிடக்க வேண்டும் என்பது உடலில் நல்ல அரத்தம் ஓடாத கண்ணதாச அல்லது சுப்பிரமணிய அல்லது பக்தவத்சலத் தமிழர்களின் மானங்கெட்ட தன்மையாக விருக்கலாம். அது மற்றவர்களுக்கும் இருக்கத்தான் வேண்டும் என்னும் வெண்டைக்காய் அறிவுரை அறவுரையன்று; தமிழினத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் காட்டிக் கொடுப்பு உரையாகும். அந்நிலைக்குத் தமிழர்கள் தாழக் கூடாது; எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே இக் கட்டுரையின் தலையாய நோக்கமாகும். —பெருஞ்சித்திரன்.

## தாள் விலையேற்றம்!

தாள் விலையேற்றம் அளவிறந்து போனதால் சில பக்கங்கள் மட்டத் தாளில் அச்சிடப் பெற்றுள்ளன. நிலைமை சீராகும்வரை தென்மொழி முழுவதும் மட்டத் தாளிலேயே வரும். அன்பர்கள் பொறுத்தருள்க.

—அமைச்சர்.

தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக்
கருத்தரங்குச் சொற்பொழிவுகள்: (தொடர்ச்சி)

# 0 தமிழ்-
# குமரி நாட்டில் தோன்றியது.

## 0 அது மற்ற மொழிகளுக் கெல்லாம் முந்தியது.

0 வரலாற்றுப் பொத்தகத்தில் உள்ள படத்தில் கூட ஆரியனை அழகிய வடிவினனாகவும், தமிழனை இழிந்த வடிவினனாகவும் காட்டியிருக்கின்றார்கள்.

0 உலக மொழிகளில் தமிழ் ஒன்றில் மட்டுந்தான் உயிர்மெய் வடிவம் உள்ளது. நுட்பமான ஒலி மையப்பு இது.

0 காமில் சுவலபெல் ஓர் ஆரிய வெறியர். அவர் தமிழைச் சரியாகப் படித்ததே இல்லை; பிலியோசா சமசுக்கிருத வழித் தமிழ்ப் படித்தவர்; அவரும் ஒரு தமிழறியாத பெருமாள்!

0 நீலகண்ட சாத்திரியார் சமசுக்கிருதத்தைப் பற்றியோ ஆரியத்தைப் பற்றியோ சொல்வதென்றால் துரும்பைத் தூணாக்குகிறார்; தமிழைப் பற்றியோ தமிழர்களைப் பற்றியோ சொல்லுவதென்றால் தூணைத் துரும்பாக்குவது மட்டுமில்லை; ஒன்றுமில்லாதபடி ஆக்கி விடுகின்றார்.

0 அக்காலத்தில் கால்டுவெல்லுக்கு வழிகாட்ட வல்ல தமிழ்ப் புலவர் ஒருவரும் இருந்ததில்லை.

0 வின்செண்டு சுமித்தே இந்திய வரலாற்றை ஓரளவு சிறப்பாக எழுதியவர்.

0 நம் தமிழ்ப் பேராசிரியர்களுக்குப் பகுத்தறிவு, நெஞ்சுரம், தன்மானம் மூன்றும் துளிக் கூட இல்லை. எனவே யாரும் இதைப்பற்றியெல்லாம் கவலைப் படுவதில்லை.

0 வரலாற்றுத்துறை, கல்வெட்டுத்துறை, பழம்பொருட் கலைத் துறை இந்த மூன்றிலும் தன்மானமுள்ள தமிழர்களையே தலைவர்களாகப் போட வேண்டும்.

0 இந்தியாவைப் பொறுத்த மட்டில் ஆங்கிலம், தமிழ், இந்தி மூன்றையும் ஆட்சி மொழிகளாக்க வேண்டும்.

0 சமசுக்கிருதம் என்றும் பேச்சு மொழியாக இருந்ததே இல்லை. அஃது ஓர் அரைச்செயற்கை இலக்கிய மொழி!

0 தமிழ்தான் வடக்கே போய்த் திரவிடமானது; திரவிடம் வடமேற்கே போய் ஆரியமாக மாறினது.

0 வடதிரவிடமாகிய பிராகிருதமும் ஆரியரின் வேத மொழியும் சேர்த்துச் செய்யப் பட்டதே சமசுக்கிருதம். அஃது ஒரு பொம்மை போன்றது; அது பிறந்ததுமில்லை; இறந்ததுமில்லை.

0 தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் என்பதையும், அது குமரிக்கண்டத்தில் பிறந்தது என்பதையும் எங்கும் எவர் முன்னிலையிலும் மெய்ப்பிப் பேன்.

**0 தஞ்சைக் கருத்தரங்கில் பாவாணர் அவர்களின் அரிமா முழக்கம்!**

தஞ்சையில் கடந்த சிலை கள (31—12—72) அன்று நடந்த தமிழன் பிறந்தகத் தீர்மானிப்புக் கருத்தரங்கில், பெரும் புலவர் ரீ: கந்தசாமியார் அவர்களின் தலைமையில், மொழிநூல் முனைவர் ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி வருமாறு:

நீங்கள் சில வரலாற்று நூல்களைப் பார்ப்பீர்களானால், திரவிடன் என்று ஒரு காட்டு விலங்காண்டி (அஃதாவது மிருகாண்டி—மிராண்டி; மிருகாண்டி என்பது வடசொல்) அல்லது தாழ்ந்த நாகரிகமுள்ள ஒரு சிற்றூர் வாணனைப் படம் பிடித்துக் காட்டி யிருப்பார்கள். திரவிடன் என்று சொன்னால் உமாமகேசுவரனார், பவானந்தனார் போன்றோரைப் படம் பிடித்துக் காட்டியிருக்க வேண்டும். நம்முடைய முன்னோரெல்லாம் அவன் காட்டிய தோற்றத் தினராய் இருக்க வில்லை. இவற்றையெல்லாம் கண்ணாரக் கண்டுங் கூட நாம் எதிர்க்காமலேயே இருக்கிறோம். அதனால்தான் நம் பகைவர்கள் மேலும் மேலும் தமிழையும் தமிழனையும் பழித்துக் கொண்டே இருக்கத் துணிந்திருக்கிறார்கள். வெளிநாட்டாரும்

அவர்கள் கூறுவதை நம்புவதற்கு இடமுண்டாகி விடுகிறது. எனவே காட்சிப் பொருளளவைக்கு இடமில்லை. ஆகையினால் ஆங்காங்குக் கிடைக்கின்ற சில மண்டையோடுகளாலேயே நாம் அந்த முடிவுக்கு வந்து விடமுடியாது.

இப்பொழுது, ஐரோப்பாவின் வரலாற்றைப் பார்த்தீர்களானால், நன்னிலக் கடற்கரை (Mediterranean Region) இருக்கின்றதே, அங்கேயுள்ள மக்களில் கிரேக்கர்களை எடுத்துக் கொள்ளுங்கள்; அவர்களைப் பற்றிய வரலாற்றுப் பொத்தகத்தில் உள்ள படங்களில் பாருங்கள் அவர்கள் சட்டையே அணிந்ததில்லை; கீழ்வேட்டியும் மேல் வேட்டியும் வேவ்வேறு வகையில் அணிந்திருக்கிறார்கள். இந்த நீள் மண்டையர் தாம்அங்கேயும் அந்தக் காலத்தில் இருந்திருக்கின்றார்கள். ஏனென்றால், இங்கிருந்து போனவர்கள் அவர்கள். மேனாட்டு வரலாற்றாசிரியர்கள் மிகப் பழைய நாகரிகமாக ஒரே காலத்தில் இரண்டு நாகரிகங்களைக் காட்டுகின்றார்கள்; எகிப்து ஒன்று; சுமேரிய நாகரிகம் ஒன்று. சுமேரிய நாகரிகத்திற்குப் பிற்பட்டது தான் பாபிலோனிய நாகரிகம். இவற்றுள் இந்தச் சுமேரிய நாகரிகத்திற்கு எழுத்துச் சான்று மிகுதியாயிருக்கின்றதென்று காட்டுகின்றார்கள். அந்நாகரிகத்தை கி.மு. 3500- இலிருந்து தொடங்குகிறார்கள். அதற்கடுத்தது பாபிலோனிய நாகரிகம். ஆனால் தமிழர் நாகரிகமோ மிக மிக முந்தியது. தலைக் கழகக் காலமெல்லாம் கி.மு 10,000-க்கு முந்தியது. தமிழ்மொழி தோன்றியதோ அதற்கும் முந்தியது. இப்பொழுது எழுத்தைச் சார்பாகக் கொண்டு தமிழைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் பகைவர்கள்.

நீங்கள் இன்னொன்றை அறிந்துகொள்ள வேண்டும். இலக்கணத்திற்கு முந்தியது இலக்கியம். இலக்கியம் இருகூறானது எழுதப் பெற்ற இலக்கியம்; எழுதப் பெறாத இலக்கியம். இவற்றுள் எழுதப் பெற்ற இலக்கியத்திற்கு முந்தியது எழுதப் பெறாத இலக்கியம். அதற்கு முந்தியது மொழி. மொழி வளர்ச்சியோ ஆறு ஏழு நிலைகளைக் கொண்டது. இந்த மொழி நிலைக்குப் பிற்பட்டதே எழுத்து. அந்த எழுத்து நிலையிலும் நான்கு வகைகள் சொல்லப் பெறுகின்றன. அந்த நான்கு வகைகளுள் சிறந்ததும் இறுதியுமான நிலையைத் தமிழ் தலைக்கழகக் காலத்திலேயே அடைந்து விட்டது. மேலை ஐரோப்பிய மொழிகளை நீங்கள் பார்பீர்களானால் எந்த மொழியிலும் உயிர்மெய் எழுத்து இல்லவே இல்லை. அதில் உயிர்மெய்

உயிர்முன்னும் மெய்பின்னும் என்றில்லாதபடி உயிரொடு மெய்யும் மெய்யோடு உயிரும் கலந்தே இருக்கும். எல்லாம் Alphabet என்று சொல்லிக் கொள்வார்கள்; அவ்வளவுதான். அல்ஃபா (Alpha) பீட்டா (Beta) என்று சொல்வார்கள் அல்ஃபா, பீட்டா என்று இரண்டு எழுத்துகள் முன்னாலே தோன்றியதாலே அவ்வாறு சொல்லிக் கொள் வார்கள். அஃது எதைப்போல் என்றால், நம்மவர்கள் 'அ'னா 'ஆ'வன்னா தெரியாதவன்' என்று சொல்வதைப்போல். அ, ஆ என்பதைப் போல் அவர்கள் அல்ஃபா (A) பீட்டா (B) என்பார்கள். ஆனால் தமிழ் எழுத்துகள் எப்படி என்றால் உயிரும் மெய்யும் மட்டு மல்ல; உயிர்மெய்யும் தோன்றியது. அஃது ஏன் அவ்வாறு தோற்றி னார்கள் என்றால், நம் பழைய இலக்கணவாசிரியர்கள் எல்லாரும் முற்றும் துறந்த முனிவர்கள்; சிறந்த மெய்யறிவுள்ள, கொண் முடிபுப் பேரறிஞர்கள். அஃதாவது 'தத்துவஞானிகள்'. அவர்கள் மூன்று வகையான பொருள்களை இவ்வுலகத்திலே கண்டார்கள். உயிர், உயிரில்லாத பொருள்கள், உயிரும் மெய்யும் கூடிய பொருள்கள். ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்கள் ஈறாக உள்ள அனைத்தும் நிலைத் திணை முதல் மாந்தன் ஈறாக உள்ள அறுவகைப்பட்ட உயிர்மெய்கள். எனவே தாம் கண்ட எழுத்துகளுக்கும் உவமை முறையிலே உயிர் என்றும், மெய் என்றும், உயிர்மெய் என்றும் பெயர்க ளிட்டார்கள். தானே ஒலிப்பது உயிர்; உயிரின்றி இயங்காத எழுத்து மெய்; உடம்பு போன்றது; இரண்டும் கலந்தது உயிர்மெய். இந்த வகைகளைக் கூட முறையாக வைத்திருக்கின்றார்கள். முதன் முதல் ஓர் ஆளைப் பார்த்தவுடன் நமக்கு உயிர் தெரிவதில்லை. உடம்பு தான் விளங்கித் தெரியும். க என்று சொன்னால் க்+அ. இந்த உயிர்மெய் உண்மை எல்லா மொழிகளிலும் உண்டு. Cat (கேட்) என்று சி, ஏ, டி என்று பிரித்துச் சொன்னாலும் 'கேட்' என்று தானே (முதலில் 'க்'கைத்தானே) சொல்லல் வேண்டும். King என்பதை, K, I, N, G என்று பிரித்துச் சொன்னாலும் 'கிங்' என்று உயிர்மெய் முன்னால் வரும்படி தானே சொல்ல வேண்டும். க், ஐ, ங், கு-என்று சொல்லிக் கொண்டிருக்கிறான்? K, I., சேர்ந்தாலே 'கி' என்றுதானே உயிர்மெய் வருகின்றது. ஆனால் அதை அவன் கண்டு பிடிக்க வில்லை. அந்த மெய்யும் உயிரும் சேர்ந்து ஒன்று போல் ஒலிக்கின்றது என்பதை அவன் பிரித்து உணரவில்லை. அவர்களைப் போலன்றி நம் முன்னோர்கள் சிறந்த மெய்ப் பொருள் அறிஞர்களாயிருந்ததாலே அதற்கு உயிர்மெய் என்று பெயரிட்டார்கள். இந்த உயிர்மெய்

அமைப்பினுலே எழுத்துத் தொகை நீண்டு விடுகிறது. ஆகையினுல் இதற்கு நெடுங்கணக்கு என்று பெயரிட்டார்கள். அந்த உயிரும் மெய்யும் மட்டும் பிரித்துச் சொல்வதைக் குறுங்கணக்கு என்ருர்கள்., மேலை மொழிகளில் இந்தப் பாகுபாடு இல்லவே இல்லை; நீங்கள் எந்த மொழியை எடுத்துக் கொண்டாலும் சரி. இந்த முறை தமிழிலேதான் தோன்றியது. ஆனுல் இப்பொழுது சொல்லப்படுவது என்ன? 'முதன் முதலில் இம் முறை சமசுக்கிருதத்தில்தான் தோன்றியது. சமசுக்கிருதத்தைப் பின் பற்றித் தமிழில் இதை வகுத்துக் கொண்டார்கள்'–என்று சொல்கிருர்கள்.

'உரத்தியும், எடுத்தும், கனைத்தும் க (K), க (G), கஹ (Kgh) என்னும் இம்மூவகை ஒலிகளையும் விட்டு விட்டுப் பொது வகையான ஒலிகளைத் தமிழர்கள் எடுத்துக் கொண்டார்கள்' என்று ஒரு தவருன கருத்தைச் சொல்கிருர்கள். கால்டுவெல்லே இந்தக் கருத்தைத் தோற்றுவித்து விட்டார். அஃது எதனுலே என்ருல் இந்த வரலாறு தெரியாமையாலே! ' தமிழ் குமரி நாட்டில் தோன்றியது; அது மற்ற மொழிகளுக்கெல்லாம் முந்தியது; என்னும் உண்மையை அவர் அறியாததாலேயே! எனவேதான் இந்தக் குமரி நாட்டு உண்மையை அடிப்படையாக நாம் வலியுறுத்த விரும்புகின்ருேம். இதற்குப் பின்னுல் வேறு போராட்டங்கள் வரும். இந்த உண்மையை நாம் நன்ருக, அழுத்தந்திருத்தமாக, உறுதியாக உள்ளத்திலே கொள்ள வேண்டும். முதன் முதலாக இந்த நெடுங்கணக்கு தோன்றியது தமிழில்தான். அதற்குப் பின்பு திரவிடமொழிகளிலும், அதன்பின் வடநாட்டு மொழிகளிலும் தோன்றியது. இந்த முறையைத்தான் சமசுக்கிருதம் பின்பற்றியிருக்கிறது.

எழுத்து, மொழிக்குப் பிற்பட்டது. மிகப் பழைய காலத்திலேயே தமிழில் எழுத்து தோன்றி விட்டது. ஆனுல் வடக்கே யிருந்து வந்த சமணர்கள் சிலரும் பௌத்தர்களும் அந்தக் காலத்திலே வடக்கே வழங்கிய பிராமி எழுத்தைத் தென்னுட்டிலே தொடர்ந்து எழுதிக் கொண்டு வந்தார்கள். அவற்றில் கல்வெட்டுகள் மதுரையருகிலும் கிடைக்கின்றன. நம் தமிழ்ப் பகைவர்கள் இதையே சான்ருகக் கொண்டு, இதிலிருந்துதான் நம் தமிழ் எழுத்தே தோன்றியது, அஃதாவது அசோகர் காலத்திய பிராமி எழுத்து கி.மு. இரண்டாம் நூற்ருண்டில்தான் தமிழகத்தில் தோன்றியது; இதிலிருந்துதான் தமிழ் நெடுங்கணக்கு வகுக்கப் பெற்றது; தொல்காப்பியம்

தோன்றியது அதற்குப் பிற்பட்டுத்தான் என்று, போன உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கிலே, ஐராவதம் மகாதேவன் என்னும் ஒருவர், தில்லியிலே இருப்பவர், எழுதி அச்சிட்டுப் படித்து விட்டுப் போய் விட்டார். ஆனால் அதற்கு எதிர்ப்பு ஒன்றும் இல்லை, அந்தக் கருத்தரங்கோ ஒரு சந்தைக் கூட்டம் போல் நடந்தது.

இந்த உலகத்தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு உள்ளதே, அதைப் பற்றி ஒன்று உங்கட்குத் தெரிய வேண்டும். இது தனிநாயகம் என்ற வையாபுரியின் வேலை; இவ்வளவும். மூன்று மாநாடுகள்! நடந்து விட்டன. பெரிய மாநாடுகள் உலகத் தமிழ மாநாடுகள் கூட்டத்தினுடைய ஆரவாரத்தையும் மக்கள் தொகையையும் கண்டே பலரும் மயங்கி விடுகிறார்கள். ஆனால் ஒருவரும் ஆய்ந்து பார்ப்ப தில்லை. இப்பொழுது ஒரு செய்தியைச் சொல்கின்றேன். இப்படி நடந்தால் எப்படியிருக்கும் என்று நீங்கள் எண்ணிப்பாருங்கள்:

ஒரு பெரிய மாநாடு நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம்; இங்கிலாந்திலே! அஃது உலகத்தமிழ் மாநாடு. அதற்குத் தலைமை தாங்குகிறவர் இங்கிலாந்துப் பேராசியார். அதற்குக் கொடியேற்றி வைக்கிறவர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் நிக்சன். அதைத் தொடங்கி வைக்கிறவர் கோசிசின் அல்லது குரோமிகோ போன்றவர். சீனக் குடியரசுத் தலைவர் சூ. என். இலாய் போன்றவர்கள் அதிலே பேச்சாளர்கள் என்று வைத்துக் கொள்வோம். இதைப் பார்க்கிறவர்கள் என்னவென்று நினைப்பார்கள். "அடேயப்பா, உலகம் முழுவதும் தமிழ். மாநாட்டை நடத்தத் தொடங்கி விட்டார்கள்." என்று ஆராய்ச்சியாளர்கள் கூடப் பெருமையாகத்தான் பேசுவார்கள். ஆனால் என்ன பயன் என்று நீங்கள் கருதிப் பார்க்க வேண்டாமா? இப்படி இவர்களெல்லாரும் சேர்ந்து ஒரு தமிழ் மாநாட்டை நடத்துவதென்றால் என்ன நடக்கும்? இப்படித் தான் இன்று நடக்கிறது.

இந்தத் தனிநாயகம் என்கிறவர் பிறர் முயற்சியாலே ஒரு பெயர் பெறுவதிலே ஒரு தனிநாயகம்! (சிரிப்பு!) அவருடைய வரலாறெல்லாம் உங்களுக்குத் தெரியாது. அவர் முதலில் Tamil Culture என்ற ஓர் இதழைத் தொடங்கினார். அதில் தம்மைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் குறித்துக் கொண்டார். அதற்கப்புறம் ஈழத்திலே பல்கலைக் கழகத்திலே ஒரு பதவிக்குத் தாண்டினார். அங்கிருந்து மலேயாவிலே ஒரு நல்ல வாய்ப்பு வந்து சேர்ந்தது.

அங்கே பேராசிரியாக விருக்கிறார். முதல் முதலிலே அங்குத்தான் உலகத்தமிழ் மாநாடு. மூதன் முதலில் தமிழ் நாட்டில்தான் நடப்பதா மலேயாவில் நடப்பதா? அதோடுகூட, தமிழ் என்ன ஒரு வழக்கற்ற மொழியா? எந்த மொழியில் தமிழ் மாநாடு நடக்க வேண்டும்? ஆங்கில மொழியிலா நடப்பது? இப்படி ஆங்கிலத்துக் கென்று ஒரு மாநாடு நடப்பதானால் வேறு ஒரு மொழியிலா நடத்திக் கொண்டிருப்பார்கள்? மற்ற மொழிகளிலே வேண்டாம்; பிரஞ்சு மொழியில் நடத்துவதென்றாலும் அதற்கு இணங்குவார்களா? தமிழ் ஓர் உயிர் மொழி. அதற்கென்று ஒரு மாநாடு நடப்பதென்றால் தமிழிலன்றோ நடக்க வேண்டும். அதில் பேசுகிறவர்களெல்லாரும் தமிழில் தான் பேசுதல் வேண்டும். கட்டுரை படிப்பதென்றாலும் தமிழில்தான் எழுதிப் படித்தல் வேண்டும். பேசவோ எழுதவோ தெரியாவிட்டால் பார்வையாளராகத்தான் வந்திருக்க வேண்டுமே தவிர, கருத்துக் கூற முடியாது. (கைதட்டல்). ஆனால் இந்த மாநாடுகள் அப்படியில்லை. எவரும் எந்த மொழியிலும் பேசலாம். அந்தக் கருத்தரங்கிற்கு ஒரு தலைவருமில்லை. ஒரு நடுவரும் இல்லை.

இங்குத் தமிழகத்தில் நடந்த உலகத் தமிழ்க் கருத்தரங்கில், காமில் சுவலபெல் என்னும் ஒருவர்; அவர் ஓர் ஆரிய வெறியர். அவர் என்ன படித்து விட்டுப் போனார் தெரியுமா? Introducing Tamil Literature என்னும் ஒரு சிறு சுவடி. ஆங்கிலத்திலே எழுதிப் பரப்பிவிட்டுப் போய் விட்டார். அதில் வரும் ஒரு பகுதியைச் சொல்லு கின்றேன். "மறைமலையடிகள், சோமசுந்திர பாரதியார், பாரதிதாசன் இந்த மூவரும் தமிழைக் கெடுத்தவர்கள்." எப்படி யிருக்கிறது பாருங்கள்! (சிரிப்பு) எவ்வளவு சிறந்த, அழகிய உண்மை! அவர் ஆராய்ச்சியினாலே கண்டு பிடித்தது! (பெருஞ் சிரிப்பு) "இவர்களுடைய கொள்கையினாலே உகை அறிஞர்களுக் குள்ளே பிரிவினையும் பகைமையுந்தாம் உண்டாகும். இவர்கள் நூல்கள் நாளடைவில் தாமாக ஒழிந்து போம்"–இப்படி எழுதி வைத் திருக்கிறார். இப்படிப்பட்ட இவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு ஒரு மாநாடு நடத்தினால் எப்படியிருக்கும்? நீங்களெல்லாம் நன்றாக எண்ணிப்பாருங்கள்.

மறைமலையடிகள் தமிழுக்காகப் பட்டபாடு எவ்வளவு? அவர் தமிழில் மட்டுமல்லர், சமசுக்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் வல்லவர். அவருடைய ஆங்கில நடை எவ்வளவு பெரிய பட்டந்தாங்கி

ஆங்கிலப் படிப்பாளிகளுக்கும் வரவே வாரது. மிக அருமையாக எழுதுவார், ஆங்கிலத்திலே! அழகிய நடை; எழுத்தும் மிக அருமை யாக விருக்கும். அவர்கள் இவ்வாறிருந்தும் அவரைப் பழித்துவிட்டுப் போயிருக்கிருர். பாரதிதாசன் ஏதோ தனிப்பட்ட ஒரு கொள்கை யுடையவராக இருந்தும், தமிழுக்காக எவ்வளவோ பாடுபட்டார். சோமசுந்திர பாரதியாரைச் சொல்ல வேண்டுவதில்லே. இப்படிப் பட்டவர்களேயெல்லாம் அவர்கள் பழித்துவிட்டுப் போய் விட்டார்கள் அவர் (காமில் சுவலபெல்) தமிழை எப்படி ஆராய்ந்திருக்கிருர். எந்தெந்த நூல்களே அடிப்படையாகக் கொண்டார் என்ருல், நற்றிணை என்ற தொகை நூலேயும், சானகிராமன் என்பவர் எழுதிய நாலுவேலி நிலம் என்ற நாடகத்தையும் வைத்தே தமிழை ஆராய்ந்திருக்கிருர். அந்த நூல் தஞ்சையில் நடந்த ஒரு கதையை அடிப்படையாக வைத்து எழுதப் பெற்ற நூல். அதைப் போன்ற கடுங்கொச்சை நடையான ஒரு நூல் இருக்கவே முடியாது! சேரி மக்கள் பேசுவதைவிட மிகக் கடுமையான கொச்சை நடையை உடையது. அதை வைத்துக் கொண்டு தமிழை ஆராய்ந்துள்ளார். (சிரிப்பு) தமிழ் மொழியினுடைய காலம் (தமிழ் தோன்றியதே) கி.மு. 1500 என்ற முடிவுக்கு வந்திருக்கிருர். இதைப் பார்த்த பின்னும் கேட்ட பின்னும் நம்முடைய பேராசிரியர்கள் எல்லாரும் அக்கருத்தை எதிர்க்காமல்தான் இருக்கிருர்கள். இப்படி, அஃதாவது இந்தியர்களி லேயே சிலரைக் கண்டாலும் நம் பேராசிரியர்கள் அஞ்சிக் கொண்டு தான் இருக்கிருர்கள். ஆங்கிலேயர் என்ருலோ மிகவும் அஞ்சு- கிருர்கள்.

இப்பொழுது நம் சென்னே ஆளுநர்கூட என்னென்னவெல் லாமோ தமிழைப் பற்றிப் பேசுகிருர், ஆனுல் அவர் கருத்தைக் கேட் கின்ற நம் புலவர்கள் ஒருவருக்கும் பேசுவதற்கு நா வருவதில்லே. அவர் என்ன சொன்னுலும் கேட்டுக் கொண்டு அப்படியே இருந்து விடுகின்ருர்கள். ஆகவே இந்தத் துறையில் எவர் உண்மையான அறிஞர் என்று அறிதல் வேண்டும். அப்படிப்பட்டவர்களுத்தான் நாம் இதுபோன்ற மாநாடுகளில் இடம் தருதல் வேண்டும். இந்தத் தனி நாயகம் அந்த உலகத் தமிழ்க் கழகத்திற்கு பிலியோசா என்னும் பிரஞ்சுப் பேராசிரியர் ஒருவரையே தலேவராக வைத்திருக் கின்ருர். அவர் சமசுக்கிருதம் படித்தவர். தமிழறியாத ஒருபெருமாள். அவர் எப்படிப் படித்தார் என்ருல், இக்கால் ஆங்கிலம் போல்

(தொடர்ச்சி 49-ஆம் பக்கம்)

# கண்டங்களின் இயக்கம்.

தி. இளம்பூரணன், அ.மு.

உலகின் நில அமைப்புகள் நிலையானவையல்ல; அவை நாளுக்கு நாள் மாறிக்கொண்டு வருகின்றன எனும் கருத்து நெடுநாட்களுக்கு முன்னமேயே உணர்ந்துரைக்கப்பட்டாலும், கடந்தசில ஆண்டுகளிலேயே உண்மையென ஏற்றுக் கொள்ளுமாறு அறிவியல் ஆய்வுகள் சான்றளித்துள்ளன. இலக்கிய நாகரிகத் தடங்கள் கொண்டு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த நில அமைப்பை உய்த்துணர முடியுமேயொழிய நில அமைப்பில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை நாம் அறியத்தக்க வகையில் பல நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த நில அமைப்பை உய்த்துணரவியலாது. ஆயினும் அறிவியலின் இன்றைய வளர்ச்சி ஆயிரம் கோடி ஆண்டுகட்கு முன்னிருந்த நில அமைப்பையும் நாமின்று உணருமாறுள்ளது.

பாங்கே (Pangaea) என அழைக்கப்பட்ட பெருநிலப்பரப்பே ஏறத்தாழ இருபது கோடி ஆண்டுகளுக்கு முன் உடையத் தொடங்கித் துண்டுகளாய்ப் பிரிந்து இன்று நாம் காணும் கண்டங்களாய் உள்ளது. நில நூல் அறிவியலார் சிலர் இலாரேசியா (Laurasia) காண்டுவானுலாண்டு (Gondwanaland) எனும் இரு பெரும் நிலங்களே சிதைவடைந்து இன்றைய கண்டங்களாய் உள்ளன எனவும் கருதுகின்றனர்.

தென் அட்லாண்டிக் பெருங்கடலினுல் (South Atlantic ocean) பிரிக்கப்பட்டுள்ள பிரேசில் (Brazil) ஆப்பிரிகா (Africa) கரையோரங்களின் அமைப்புகள், அவ்விரு நிலங்களும் ஒன்ருய் இருந்து பின் பிளந்து பிரிந்துள்ளன என்பதற்குச் சான்று பகர்கின்றன. இரு கூறுகளாய் உடைந்த மண் தட்டின் ஓரங்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்துமாறு அமைந்திருப்பன போன்று இந்நிலங்களின் எதிரெதிர் (கரையோர) அமைப்புகளும் அமைந்துள்ளன. இக்கருத்தின்படி ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதியுடன் தென்அமெரிக்க நிலப்பரப்பும், தெற்கு தென்கிழக்குப் பகுதிகளுடன் அன்டார்டிகா (Antartica) ஆசுத்திரேலியா (Australia) இந்தியா நிலப்பரப்புகளும் இணைந்த ஒரு பெரு நிலமே பின் சிதைந்து இன்று காணும் கண்டங்களாய் உள்ளன எனக் கொள்ளலாம்.

ஆப்பிரிகாவின் கினியா வளைகுடா (Gulf of Guinea)ப் பகுதியில் காணப்படும் மலைகளும் பிரேசில் நாட்டில் காணப்படும் மலைகளும் மிகப்பழையனவானாலும் கட்டமைப்பாலும் வியத்தகு வகையில் ஒத்திருப்பது இம்மலைகள் ஒரே நிலத்தில் தோன்றிப் பின் நிலங்களுடன் பிரிந்தன என்பதைப் பறை சாற்றுகின்றன. இவ்வாறே இம்மலைகளின் மடிப்புகள் அமைந்துள்ள வகையும் இவ்விரு நிலங்களிலும் காணப்படும் 'புதையுயிர்த் தடங்களும்' (Fossils) இந்நிலப்பரப்புகள் ஒரு காலத்தில் ஒன்றுயிருந்தவென அறிவிக்கின்றன. இவ்வாறே வட அமெரிக்காவும் ஐரோப்பாவும் ஒரே நிலப்பரப்பாய் இருந்ததற்குச் சான்றுக அவ்விரு கண்டங்களும் ஒத்த அமைப்பில் ஒத்தபண்புள்ள நிலக்கரிப் படிவுகளைப் பெற்றுள்ளன.

ஆப்பிரிகா, மடகாசுகர் (Madagascar), இந்திய நிலப்பரப்புகள் வடக்குக் கிழக்கில் திசை கொண்டுள்ள மடிந்த தீப்பாறைகளைக் கொண்டுள்ளன. இத்துடன் இக்கண்டங்களில் காணப்படும் வைரங்களும் இவை ஒரு நிலப்பரப்பினின்று சிதைந்தவை என்பதற்குச் சான்றுகின்றன.

பெருங்கடல் அறிவியலார் (Oceanographers) ஆழ்கடலில் மலைகளும் மலைத் தொடர்களும் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். பெரும்பாலான பெருங்கடல்களின் ஊடே வளைந்து செல்லும் இம் மலைத்தொடர் 47,000 கல் (Mile) நீளம் உள்ளதென அறிந்துள்ளனர். இம்மலைத் தொடர்களின் இடையிடையே ஆயிரக்கணக்கான வழிகளில் எரிமலைக் குழம்பு கசிந்து வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு கசிந்து வரும் குழம்பு பரவி இறுக, புதிய கடலடித் தரைகள் தோன்றுகின்றன. ஆயிரங்கோடி ஆண்டுகளான பெருங்கடல்களில் படிவுச் சேற்றின் முதுமை சில நூறுயிரம் ஆண்டுகளே என்பதன் கரணியமும் இப்புதிய கடலடித் தரைகளின் தோற்றமே ஆகும்.

நிலக்கோளின் உட்பகுதியில் பொருள் உருகிக் குழம்பாய் உள்ளது. கதிரியக்கத் தனிமங்களினுல் (Radio active elements) சூடேற்றப்பட்டு, உறுதி குறைந்த கோளின் மேற்பரப்பைத்துளைத்துக் கொண்டு இக்குழம்பு புறப்பரப்பை அடைகின்றது. இதுவே ஆழ்கடல் மலைத்தொடர்களினின்றிழியும் எரிமலைக் குழம்பாகும். இக்குழம்பு புறப்பரப்பை அடைந்து இறுகிப் பாளமாய்ப்படியும். மேலும் உமிழப்படும் குழம்பு இப்பாளங்களில் ஒட்டிக்கொண்டும் தள்ளிக்கொண்டும்

பக்கவாட்டில் நகரத் தொடங்கும். இது தொடர்ச்சியாய் நிகழ்ந்து எரிமலைக்குழம்புப் பாளங்கள் பல்லாயிரக்கணக்கான கல் தொலைவைக் கடக்கின்றன. இவ்வாறு செல்லும் எரிமலைக் குழம்புப் பாளம் கண்டங்களின் விளிம்புகளை அணுக கீழ்நோக்கி நகர்ந்து கோளின் உட்புகுந்து விடும். அடுத்தடுத்து நகர்ந்து செல்லும் இப்பாளங்களைத் தகடுகள் (Plates) எனலாம். இத் தகடுகளின் எண்ணிக்கை ஆறு முதல் இருபதுக்குள் இருக்கலாம் எனவும் ஒவ்வொன்றும் ஐம்பது முதல் நூறு அயிரமாத்திரை (கிலோ மீட்டர்) வரை தடித்திருக்கு மெனவும் இவற்றின் மேலேயே எல்லாக் கண்டங்களும் கடல்களும் அமைந்துள்ளன எனவும் உய்த்துணர்ந்துரைக்கப்படுகிறது.

கண்டங்களும் கடல்களும் நெருங்குவதற்கும் பிரிவதற்கும் இத் தகடுகள் இவ்வாறு ஊர்ந்து செல்வதே கரணியமாகும். இரு பெருங் கடல்களைத் தாங்கும் தகடுகள் இவ்வாறு ஊர்ந்து ஒன்றையொன்று எதிர்ப்பட நேர்ந்தால், ஒன்று மற்றதன் அடியில் புகுந்துவிடும். இதனுல் மேலுள்ள தகடு மேலெழ எரிமலைத் தீவுகள் கடலில் தோன்றுகின்றன.

நிலப்பரப்புகளைத் தாங்கிய இரு தகடுகள் இவ்வாறு எதிர்ப் பட நேரின், ஒன்றின் கீழ் மற்றது நுழையாது ஒன்றையொன்று மோத, மோதுமிடத்தில் பெருமலைகள் எழுகின்றன. இவ்வாறே இந்தியத் துணைக்கண்டத்தைத் தாங்கி நின்ற தகடு அன்டார்-டிக்காவிலிருந்து இருபதுகோடி ஆண்டுகளுக்கு முன் பிரிந்து வட திசையில் ஊர்ந்து ஐயாயிரத்து அறுநூறு கல் தொலைவு கடந்து ஆசியாவின் தென்கிழக்கு விளிம்பில்-சீனுவின் தெற்கு ஓரத்தில் மோத வானளாவும் பனிமலை (இமயமலை) எழுந்தது. இவ்வாறே ஆப்பிரிக்க ஐரோப்பியத் தகடுகள் மோத ஆல்ப்சு (Alps) மலைகள் எழுந்தன.

பெருங்கடல் தாங்கிய தகடும் பெருநிலந்தாங்கிய தகடும் எதிர்ப் படநேரின், பெருங்கடல் தகட்டின்கீழ்ப் பெரு நிலத்தகடு செல்ல, பெருமடிப்பு மலைகள் எழுகின்றன. இவ்வாறே தென் அமெரிக்க ஆண்டசு (Andes) மலைகள் தோன்றின.

நிலப்பரப்பு நீர்ப்பரப்பாகவும் நீர்ப்பரப்பு நிலப்பரப்பாகவும் மாறுதற்கு உலகின் மேற்பரப்பு மேலும் கீழுமாய் அசைவது கரணிய மாகும். இதனுல் இங்கிலாந்தின் அளவைவிட பெரிய ஒரு கண்டம்

# ஓர் உண்மை- தெரியுமா உங்களுக்கு?

தமிழ் நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி களில் தனிச்சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படும் பள்ளி, கோவை மாவட்டத்தில் அமராவதி நகரில் இயங்கிவரும் 'சைனிக்' (படைப்பயிற்சிப்) பள்ளியாகும். இப்பள்ளி, தமிழ்நாட்டில் தமிழக அரசு அளித்திருக்கும் ஏறத்தாழ 200 குறுக்கம் (ஏக்கர்) நிலம், பொதுவாக மருத்துவக் கல்லூரிக்கும், பொறியியற் கல்லூரிக்கும் போதுமான கட்டடங்கள், மாணவர்களுக்குத் தமிழக அரசு ஆண்டுக்கு ஏறத்தாழ 10 இலக்கம் உருபா அளவிற்கு அளிக்கும் உதவித்தொகை ஆகிய இத்தனையும் பெற்று இயங்கி வருகிறது. ஆயினும் இது நடுவண் அரசின் படைத்துறைப் பிரிவின் மேலாண்மையின்கீழ் இயங்கிவரும் நிலைக்கு உட்பட்டுத் தமிழர் களையும், தமிழையும் வாழ்விக்கத் தவறிவரும் நிலைகளை நோக்கின் நெஞ்சு நோகும்.

அ) இருமொழிக் கொள்கைக்குச் சாவுமணி.

தமிழ் நாட்டில் மாநில அளவில் தமிழும், உலகத் தொடர்புக்கு ஆங்கிலமும் போதும் என்ற நல்லதொரு கொள்கையை ஏற்றுக் கொண்டு அதை உறுதியாக வலியுறுத்தி வருவதை எவரும் அறிவர்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அட்லான்டிக் கடலுக் கடியில்—அயர்லாந்து ஐசுலாந்துக் கிடையில் 1.6 அயிர மாத்திரை (கிலோ மீட்டர்) ஆழத்தில் மூழ்கிக் கிடக் கின்றது. இவ்வாறே இந்திய மா கடலுக் கடியில் பழம் பெருந் தமிழகத்தின் பெரும் பகுதி மூழ்கியிருக்க வேண்டும்.

ஒரு நூறாயிரம் ஆண்டுகளாய் உயிரற்று, நீரற்றுக் காய்ந்து கடல் மட்டத்திலிருந்து மூன்று அயிர மாத்திரை (கிலோ மீட்டர்) தாழ்ந்து, குழிந்த பகுதியாயிருந்த நடுத் தரைப்பகுதி (Meditteran--ean) ஐந்தரை நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன் அதன் தென்புறத்தில் தோன்றிய வெடிப்பின் வழியே அட்லான்டிக் பெருங்கடலின் நீர் புகுந்து கடலாய் மாறியது. O

ஆனல் 'சைனிக்'பள்ளியில் இருமொழிக் கொள்கைக்குப் புறம்பாக மும்மொழிக் கல்வித்திட்டம் எப்படி முடுக்கமாகச் செயல் படுத்தப்படுகின்றது என்பதும், அதற்குத் தமிழக அரசின் பல இலக்க உருபா உதவி துணையாக இருந்து வருகிறது என்பதும் பலருக்கும் தெரிந்திருக்க வழியில்லை.

ஆ) இந்திக்கு முடி; தமிழுக்கு அடி

1 எல்லா மாணவர்களும் எட்டாம் வகுப்புவரை கட்டாய இந்தி கற்றுவர வேண்டும்.

2 மாணவர்கள் பள்ளி அணிவகுப்புகளிலும், மாணவர் அரங்கில் நாளும் நடைபெறும் கூட்டங்களிலும் இந்திக்கட்டளைச் சொற்களே பயன் படுத்தப்படுகின்றன.

3 பதினோராம் வகுப்பு வரை உள்ள பள்ளியில் பத்தாவது வகுப்பு வரையே தமிழ் கற்பிக்கும் வாய்ப்பு உள்ளது.

4 அப்படி அளிக்கப்படும் தமிழ்க்கல்வியும் மற்ற பள்ளிகளில் எட்டாம் வகுப்புத் தமிழறிவுக்கும் ஒப்பாகாது.

5 தமிழ் அறிவு குறைக்கப்படுகிறது. தமிழ் உணர்ச்சி கொல்லப்படுகிறது. கல்லூரியில் சேரும் தமிழ் மாணவர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன.

இ) தமிழுக்கு ஒன்று; இந்திக்கு நான்கு!

1 முதுகலை (எம்.ஏ) பட்டம்பெற்ற தமிழாசிரியர் ஒருவர்.

2 முதுகலை (எம்.ஏ) பட்டம்பெற்ற இந்தி ஆசிரியர்கள் நால்வர்.

| | | | |
|---|---|---|---|
| முதல் | இந்தி | ஆசிரியர்க்குச் சம்பளம்: | 550 + 200: 750. |
| 2-ஆவது ,, | ,, | ,, | : 475 + 200: 675. |
| 3-ஆவது ,, | ,, | ,, | : 450 + 200: 650. |
| 4-ஆவது ,, | ,, | ,, | : 425 + 200: 625. |

(இந்த நால்வரும் பார்ப்பனர்கள்)

ஈ) ஆசிரியர்களிலேயே இன மேலாண்மை!

இங்கு மொத்தம் 30 ஆசிரியர்கள் உளர். தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர் என்று அழைக்கப்படக் கூடியவர்கள் 8 பேர்; பார்ப்பனர்கள் 12 பேர்; மலையாளிகள் (கிறித்தவர்கள் உட்பட) 8 பேர்; வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் 2 பேர்.

உ) படையில் சேரும் மாணவர்கள்!

இப்பள்ளி படையில் தமிழர்களைப் பெரிய அதிகாரிகளாக ஆக்குவதற்காகவே என்னும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. பள்ளி தொடங்கிய 10 ஆண்டுகளில் படையில் சேர்ந்த மாணவர்கள் 80 பேர். அதில் தமிழ் மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் 50க்கும் குறைவான பேரே. செய்யும் செலவிற்கும் பெறும் பயனுக்கும் இஃது ஈடுகட்டுமா?

ஊ) சில ஆண்டுகளாகக் கேரள மாநிலத்து மாணவர்கள் 25-30 மாணவர்கள் சேர்க்கப்பட்டு இந்தியைப் பத்தாம் வகுப்புவரை அவர்கள் கற்க வாய்ப்பு ஏற்படுத்தி, இந்தி ஆசிரியர்களின் தொழிலை நீடிக்கச்செய்து வருகின்றனர்.

எ) இத்தகைய அமைப்பைத் தமிழக அரசு கண்டும் காணாது செயல்பட்டு வருவதின் நோக்கம் யாதோ? இப்பள்ளியைத் தமிழக அரசின் நேரிடையான ஆளுமையில் ஏற்றுத் தமிழர்களுடைய நலம் பேணும் பள்ளியாக மாற்றிச் செயல் படுவதற்குத் தடை யாதோ? இதில் தமிழக அரசு தலையிட்டுச் சரி செய்யுமா? O


# ‘தென்மொழி’

## கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம்: | 9 உருபா. | 10-50உருபா | 14உருபா |
| அரையாண்டுக்கட்டணம்: | 5உருபா | 6 உருபா. | 7-50 |
| தனியிதழ்: | 75காசு | 90 காசு | 1-10 |

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

*தமிழ்மொழி, வரலாற்றுப் புரட்சி நூல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி வெளியீட்டுத் திட்டத்தில் நீங்கள் பெருமைமிகும் ஓர் உறுப்பினரா? இல்லெனில், இன்றே உறுப்பினராகுங்கள்!*

விளக்கங்கட்குத் தென்மொழிக்கு எழுதுங்கள்.

# காதைப் பிளக்கும் கடுமையான ஒலிகள்!

—வீளதீமிர் இரைகுஞேவு.

ஒலிகளின் உலகம்–அது நம் அனைவரது வாழ்க்கையிலும் ஒரு பகுதிதான். ஒலிகளின் மூலம் நாம் ஒருவருக்கொருவர் பேசிக் கருத்தைப் பரிமாறிக் கொள்கிறோம்; அறிவை வளர்த்துக் கொள்கிறோம். ஆயினும் ஒலிகள் நமக்குத் தொல்லையை மட்டுமன்று, மீளாத் துயரத்தையும் விளைவிக்க முடியும்.

சுவீடனைச் சேர்ந்த பர். உலோகான்டெர் என்பவர் இளம் பருவத்தினர். நடுவில் செவிப் புலனில் ஏற்படும் கோளாறுகள் 1956–ஆம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் 1970–ஆம் ஆண்டில் பத்து மடங்கு மிகுதியாக இருந்ததைக் கண்டறிந்து கூறினர். இதனைக் குறித்து 'சயன்சசு எட் அவனிர்' என்னும் இதழ் எழுதுகையில், ''ஐம்பது அகவைக்கு மேற்பட்ட நகர வாழ்நர் பலருக்கு இப்போது காதே சரியாகக் கேட்பதில்லை; இந்த நிலை மேன்மேலும் மிகுந்து கொண்டே செல்கிறது. வளர்ந்து வரும் தலைமுறையினரைப் பொறுத்தமட்டிலோ நிலைமை இன்னும் தாழ்வாக உள்ளது'' என்று எழுதியுள்ளது.

நகர்ப்புறத்தின் கொடுரமான ஓசைகள் அளவுக்கு மீறிச் செவிகளில் இடையறுது அறைந்து கொண்டிருப்பதால் மூளையின் உள்ளடக்க இயக்கத்திறன் தாக்கப்படுகிறது என்பதும்; அதனுல் கட்டுப்படுத்தப்பட்ட தன்னியக்கச் செயல்களின் இயக்க முறை மாறுகிறது என்பதும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனுல் ஒருவரது கவனம் குறைகிறது; அவரது வேலைத் திறனும் குறைகிறது. அதிலும் மூளை உழைப்பாளர்களே இதனுல் பெரிதும் தாக்கப்படுகின்றனர்; இதனுல் இரைப்பையில் புண்கள் தோன்றுகின்றன; மற்றும் பிற இரைப்பைக் கோளாறுகளும் தலையெடுக்கின்றன. ''ஓசையில்லாது'' இயல்பாக ஓய்வு பெறுவது குறைவதால், வேலையினுல் ஏற்படும் களைப்பு கூடிக் கொண்டே போகிறது; அது தீராத களைப்பாகவும் நிலைத்து விடுகிறது. இத்தகைய நிலைமையில், மாந்தன் அரத்த அழுத்தம், நரம்புக் கோளாறுகள் முதலிய ஏதமான நோய்களுக்கு எளிதில் ஆளாகி விடுகிருன்.

"ஒலிகளின் தாக்குதலால்" ஏற்படும் விளைவுகளை நாம் எளிதில் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது என்பது இவற்றிலிருந்து தெளிவாகிறது. எனவேதான் "ஒலி நோய்" என்ற புதியச் சொல் கூடத் தோன்றி விட்டது.

அமைதி என்பது உலகில் கிட்டுதற்கே மிகவும் அரிதான ஒன்ருகி விட்டது. வரவர ஒவ்வொரு நாளும் உலகில் ஒலிகள் மிகுந்து கொண்டுதான் போகும், வேறு வழியில்லை என்பதால் மேலை நாட்டு அறிஞர்கள் பலர் இந்தச் சிக்கலை மிகவும் அவநம்பிக்கையோடுதான் நோக்குகின்றனர்.

ஆனல் சோவியத்து ஒன்றியத்திலும் நிகரமை நாடுகளிலும் கடுமையான ஓசையின் விளைவாக மாந்தனின் உடல்நலத்துக்கும் வேலைத்திறனுக்கும் ஏற்படும் பல குந்தகங்களையும் எதிர்த்துப் போராடும் முயற்சியில் பெருங்கவனம் செலுத்தப் படுகிறது. இந்தச் சிக்கல் மேன்மேலும் மிகவும் இன்றியமையாத ஒன்ருக ஆகி வருவதை முன்னிட்டு, தொழிற்சாலைகளின் ஒலியைத் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான தனிச் சிறப்பான கட்டளையைச் சோவியத்து அரசு 1960-இல் பிறப்பித்தது.

வருங்காலத்தில் "ஒலியேயில்லாத" எந்திரங்களை உருவாக்குவதுபற்றி சோவியத்து புனை திட்ட அறிஞர்கள் இப்போதே எண்ணி வருகின்றபோதிலும், குந்தகம் விளைவிக்கின்ற இரைச்சல்களை எதிர்த்துப் போராடுவதற்கான வழிவகைகள் பற்றிய பட்டியலும் இன்றும் நீண்டு கொண்டுதான் போகிறது. எடுத்துக்காட்டாக இலிதுவேனியாவிலுள்ள இலென்ட்வாரிசு மேல்விரிப்புகள் நெய்வு ஆலையில், இரைச்சலைத் தன்னுள் சுவறிக் கொள்ளும் 'சிலாக்போர்' என்னும் புதிய பொருளைப் போர்த்திய சுவர்களை அங்கு நிறுவிய பிறகு, அத்தொழிற்சாலைகளின் தறிகள் எழுப்பும் ஒலி பாதிக்குமேல் குறைந்துவிட்டது. இதற்குக் கொஞ்சம் செலவு மிகுதிதான். என்றுலும், தொழிலாளர்களின் உடல்நலந்தான் அங்குத் தலையாய கவனத்தைப் பெறுகிறது.

ஓசைகளை எதிர்த்துப் போராடும் முயற்சிகள் ஆலைகளோடும் அலுவலகங்களோடும் நின்று விடவில்லை. நகர்ப்புற ஓசைகளைக் குறைப்பது தொடர்பாக நடத்தும் கடினமான ஆராய்ச்சிக்கும்

உருசியா ஏராளமான தொகைகளை ஒதுக்குகிறது. நகரில் எந்தெந்தப் பகுதிகளில் ஓசைகள் மிகவும் மிகுதியாகவுள்ளன என்பதைக் காட்டும் தனிநிலை வரைபடங்களும் வரையப்பெற்று உள்ளன. இதன் வழி ஒலிக் குறைப்பு நடவடிக்கைகளை சரியான முறையில் திட்டமிடவும் கட்டுப்படுத்தவும் முடிந்துள்ளது. மின்சார ஊர்திகள் நீராவி இயங்கிகள் முதலியவற்றோடு, மற்றும் பிற ஒலிக்குறைவான போக்குவாத்து வண்டிகளைப் புகுத்துவதன்மூலம், போக்குவரத்து இரைச்சல்களைக் குறைப்பதற்கான அடிப்படையான வழிகளும் வகுக்கப்பட்டுள்ளன. இது வருங்காலத்தில்தான் மேற்கொள்ளப் படும். இப்போதோ, நகரைத் திட்டமிடுவது, ஒலியைக் குறைக்கும் வகையில் நகரைச் சுற்றிலும் பசுமையான மரங்கள் செறிந்த மண்டலங்களை உருவாக்குவது முதலிய முறைகள் மிக முகாமை யானவையாக உள்ளன.

நாட்டின் மிகப்பெரும் தொழில் நடுவங்கள் அனைத்திலும் தனி-நிலை ஓசை-எதிர்ப்புக் குழுக்கள் 1968-இல் நிறுவப்பட்டன. மக்கள் வசிக்கும் வட்டாரங்களிலுள்ள தொழிற்சாலைகளின் ஓசைகளைக் கூடிய வரையில் குறைப்பதும், மனவுணர்வுடன் போக்குவரத்துத் திட்டங்களையும், மற்றும் புதிய தொழிற்சாலைகளுக்குத் தகுந்த இடங்களையும்பற்றிக் கருத்துக் கூறுவதும்தான் இந்தக் குழுக்களின் வேலை. இந்தத் துறையில் திட்டவட்டமான பல முன்னேற்றங்கள் எய்திய போதிலும், பல சிக்கல்கள்—அஃதாவது காற்றும் நீரும் தூய்மையற்றுப் போவதை எதிர்த்துப் போராடுவதைப்போல் எவ் வகையிலும் முகாமையானவையோ விரைவுத் தன்மையோ குறையாத சிக்கல்கள்- இன்னும் தீர்க்கப்படவில்லை.

"ஓசையின் தாக்குதலை"ச் சரி செய்யும் இயல்பாடுகளை, தொழில் நுட்ப முன்னேற்றம் மேன்மேலும் விரிவாக்கிக் கொண்டே செல்கிறது. ஆயினும் இந்தச் சிக்கலில் எழுந்துள்ள தொல்லைகளைப் போக்க அறிவியலார், பொறியியலார், தொழில்நுட்ப அறிஞர்கள் மருத்துவர்கள் மனை வினைஞர்கள் நகர அமைப்பாளர்கள் ஆகிய அனைவரின் கூட்டு முயற்சிகளும் தேவை. அதேபோல் இந்தத் துறையில் செய்திகளையும் செய்தி அறிவையும் பரிமாறிக் கொள்வ-தற்கு மட்டுமல்லாது, கூட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், பல்வேறு நாடுகளுக் கிடையே தொடர்புகள் விரிவடைய வேண்டி-யதும் இன்றியமையாத தாகும். O

# கோவலன் மாதவிக்குக் கொடுத்த கண்ணகி நகை எது?

—அ. திருமாலிந்திரசிங் (மு.க.)

சிலப்பதிகாரப் பாவியத் தலைவன் கோவலன் நாடக மடந்தை மாதவியிடத்துக் கொண்ட அன்பால் தன் மனைவி கண்ணகியிட மிருந்து அவளுடைய சிலம்பு தவிர ஏனைய அணி கலன்களையெல்லாம் வாங்கிச் சென்று மாதவியிடம் கொடுத்தான் என்றும், கோவலன் மாதவிக்காகக் கண்ணகியின் அணிகலன் எதையுமே கொடுக்க வில்லை என்றும்

சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி
குலந்தரு வான்பொருள் குன்றந் தொலைத்த

என்னும் வரிகளுக்கு இருவேறு பொருள்கூறி மயங்க வைக்கின்றனர். கண்ணகியிடமிருந்து எல்லா நகைகளையும் கோவலன் பெறவில்லை என்பதைப் புலவர். கு. திருமேனி அவர்கள் தம் கட்டுரையில் தெளிவாக விளக்கியிருக்கிறார். அதே நேரத்தில் புலவர் கு. திருமேனி அவர்களின் கருத்தும் ஏற்புடைத்தாயில்லை. அப்படியாயின் இதற்கு ஒரு முடிவு வேண்டுமன்றோ! எனவே முடிவு காண வேண்டி ஆராயப் புகுந்த இடத்து ஒரு புதிய கருத்து எனக்குத் தோன்றியது. அதை இங்கே காணலாம்.

முதலில் அந்திமாலை சிறப்புசெய் காதையில் கண்ணகி கோவலனைப் பிரிந்து வாழ்ந்து வரும் தன்மையைக் குறிக்கும் பொழுது,

அஞ்செஞ் சீரடி யணிசிலம் பொழிய
மென் துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்

—அந்திமாலை: 47-51.

என்று முறையே சிலம்பு, மேகலை, மங்கலஅணி, குழை என்னும் நான்கு அணிகலன்களைக் குறிக்கின்றார்.

இவற்றுள் கணவன் பிரிவால் ஒழிந்திருந்த சிலம்பு இணையுள் ஒன்று கணவன் வந்தவுடன் வாணிக முதற் பொருளாகத் தரப்

பெற்றது. எஞ்சியது கண்ணகியிடமும் இருக்கிறது. கண்ணகியின் கையில் ஒரு சிலம்பு இருந்தது என்பதை

செம்பொற் சிலம்பொன்று கையேந்தி
நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்தது
—ஊர்சூழ். 23, 24,

பொற்றொழில் சிலம்பொன்று ஏந்திய கையள்
—வழக்குரை. 42

என்று ஊர் மக்களாலும் வாயிற்காவலனாலும் கூறப்படும் வரிகளினால் அறிகிறோம்.

அடுத்து மங்கலஅணி கணவன் பிரிந்திருந்த காலத்தும் போற்றிக் காத்துக் கணவன் இறந்தவுடன் கண்ணகியால் கொற்றவைக் கோயிலில் உடைக்கப் படுகிறது. இதை

" கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்து"
—கட்டுரை. 181

என்னும் வரியால் அறிகிறோம்.

கணவன் பிரிந்த காலத்துக் காதில் அணியப்படாமல் வைத்திருந்த குழை கணவன் மீண்டு வந்ததும் மீண்டும் அணியப் பெற்றது என்பதைக்

" கோவலன் தன்னொடும் கொடுங்குழை மாதொடும்"
—காடுகாண் 205

என்னும் வரியால் அறிகிறோம்.

இவ்வாறு சிலம்பு, மேகலை, மங்கல அணி, குழை என்று குறிப்பிடப்பட்ட நான்கு கலன்களில், சிலம்பு, மங்கலஅணி, குழை என்னும் மூன்று கலன்களை மட்டும் கண்ணகியோடு கணவன் வந்த பின் தொடர்புப் படுத்தியுள்ளார். மேகலை பற்றிய எந்தக்குறிப்பும் வரவில்லை.

இறுதியில் வாழ்த்துக் காதையில் மட்டும் கண்ணகியின் தெய்வ வடிவத்தைக் கூறும்பொழுது

" பொன்னஞ் சிலம்பில் புனைமேகலை"
என்று வருகிறது.

கண்ணகி தெய்வ வடிவத்தில் வரும்பொழுது சிலம்பிற்கு அடுத்தபடியாகக் கூறப்படும் மேகலையைக் கணவன் பிரிந்ததால்

தன்னைவிட்டு நீங்கி இருந்த மேகலையைக் கோவலன் மீண்டு வந்த பின் கண்ணகி அணிந்து கொண்டதாக எந்தச் சான்றுமே இல்லை.

அப்படியாயின் அந்த மேகலை என்ன வாயிற்று?....

அந்த மேகலையை ஏன் கோவலன் மாதவிக்குக் கொடுத்திருக்கக் கூடாது?

மேலும்

" சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன்"

—கனாத். 74, 75

என்று கோவலன் கூறும் பொழுது சென்ற 'கலன்' என்று ஒருமையில்தான் கூறுகிறானே யன்றிக் 'கலன்கள்' என்று பன்மையில் கூறவில்லை. எனவே அவன் மாதவியிடம் இழந்ததாகக் குறிக்கப்படுவது ஒரு கலனும் (நகையும்), சிறிது பொருளுமாகும். அந்த ஒரு கலனும் ஏறத்தாழ சிலம்பிற்கு இணையானதாக இருக்க வேண்டும். எனவே அது மேகலையாகத்தான் இருக்க வேண்டும்.

எனவே இதன் மூலம் கோவலன் கண்ணகியின் அணிகலன்களில் ஒன்றை அஃதாவது மேகலையை மட்டுமே மாதவிக்குக் கொடுத்தான் என்று அறிகிறோம்.

இன்னும் ஒரு செய்தி...

சிலம்பும் மேகலையும் இரட்டைப் பாவியங்கள் என்று நாம் குறிக்கிறோம். சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகாரம் இயற்றப்பட்டது.

அதேபோல, மாதவியும் கோவலனிடம் தான்பெற்ற மேகலையின் நினைவாகவே அவன்பால் தனக்குப் பிறந்த மகளுக்கு மணிமேகலை என்று பெயர் சூட்டியதாகவும், அந்த மணிமேகலையைப் பற்றிக் கூறும் பாவியத்தை—சிலப்பதிகாரத்திற்குத் தொடர்பான பாவியத்தை- சிலம்பிற்கு அணிகலனான மேகலையைக் கொண்டே பெயர் கொடுத்தார் சாத்தனார் என்றும் கொள்ளலாமன்றோ? கண்ணகியின் சிறந்த அணிகளுள் ஒன்றான சிலம்பை வைத்து இளங்கோ பாவியம் எழுதினார். சாத்தனார் இன்னொன்றான மேகலையை வைத்து அது தொடர்பான இன்னொரு பாவியத்தையும் எழுதினார் என்றும் கொள்ளலாம். இந்த மணிமேகலை பெயர்க் காரணம் குறித்து வேறு சில கருத்துகள் இருப்பினும் இக்கருத்தும் எண்ணுதற்குரியது. O

ஒரு திறனாய்வு. (முன்னிதழ்த் தொடர்ச்சி)

பேரா. மு. வரதராசனாரின்

# தமிழிலக்கிய வரலாறு.

த. கோவேந்தன்.

(12-8-73 ஆம் நாள் நடுவண் நூலகக் கட்டிடத்தில் நடந்த தமிழ்த்திறனாய்வு மன்றத்தில் படிக்கப்பட்ட கட்டுரை.)

உண்மையை அறியவேண்டும் என்ற எண்ணத்துடன் மு.வ. வின் இலக்கிய வரலாற்றினை ஒருவர் எடுத்தால், "குருடும் குருடும் குருட்டாட்ட மாடிக் குருடும் குருடும் குழியில் விழுமாறே" என்ற கதையாகத்தான் முடியும். தமிழில் உள்ள காலச் சிக்கல்களைத் தீர்த்துத் தரும் தெளிவு என்பது பேரா. மு. வ. விடம் காணமுடியாது. காலம் எல்லாம் தமிழை வைத்து வாணிகமாக்கிக் கொண்டு பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் பேராசிரியர் மு.வ. நேரிய சீரிய தமிழிலக்கிய வரலாற்றை எழுத முடியாதென்பதைக் காட்டியுள்ளார். கி.பி. 1700–1900 வரை என்ற தலைப்பில், 'சதகங்'களைக் கூறி விட்டு, பலபட்டடை சொக்கநாதப் புலவர் 15-ஆம் நூற்றாண்டினர் என்கிறார். தலைப்பு 17 ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரை. ஆனால் உள்ளே 15 ஆம் நூற்றாண்டுப்புலவரைக் குறிக்கிறார். முன் பகுதியிலும் கழக்காலம் என்பதில் முக்கழகங்களைப் பற்றித் தெளிவில்லாமல் கூறியது போல், பிற்காலத்திலும் இத்தவறு செய்கிறார்.

19, 20-ஆம் நூற்றாண்டில் அச்சுப் பொறியின் வளர்ச்சியும், துணையும் காலப்பிழைகளுக்கு மு.வ. ஆளாகாமல், கருத்துப் பிழைகளுக்கு ஆளாகும் இடமாகும். குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சிக்கு மட்டும், ஒரு தனி நூல் எழுதத் தகுந்த அளவிற்கு இலக்கிய வளர்ச்சி யுண்டு. மற்ற மேனாடுகளையும் கிழக்கு நாடுகளையும் வைத்துப் பார்ப்போமானால் நமது வளர்ச்சி குறைவெனினும் நமது முன்னோர்களின் படைப்பு வளர்ச்சிக்கும் நமக்கு, இருக்கும் வளர்ச்சிக்கும் ஒப்பிடும்போது கல்வி மேம்பாடும், அச்சகமும், எண்ணற இலக்கியப் படைப்பாளிகளை- படைப்புகளைப் பெற்றுள்ளவெனலாம். தமிழகத்தின் இருபதாம் நூற்றாண்டுப் படைப்புகள் அனைத்தும் இலக்கியம் என்று கூற முடியாதென்றாலும் இலக்கியத் தரத்தினைக் காட்டும் பல இலக்கியங்கள் உண்டு. அந்த இலக்கியங்கள் என்னென்ன, படைப்பினர் யார், யார் என்று

காட்டுவது இலக்கிய வரலாற்ருசிரியரின் கடமை. ஆனுல் மு. வ. அந்தக் கடமையில்தான் தம் விபீடணக் குணங்களை எல்லாம் காட்டியுள்ளார்.

மு.வ. வின் விருப்பு வெறுப்புக்குச் சில எடுத்துக் காட்டுக்களைப் பாருங்கள். தமிழிலேயே முதன் முதல் மொழியாராய்ச்சியை அறிவியல் வழியில் கடந்த 40 ஆண்டுக் காலமாகச் செய்து வரும் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரை ஓர் இடத்திலும் குறிப்பிடவில்லை. தமிழிலக்கியத்தை மார்க்சிய நோக்கில் கண்டறிந்த தோழர் "சீவா" வைக் குறிக்கவில்லை. வரலாற்றறிவும், சமய ஆராய்ச்சித் தெளிவும் நுண்ணிய இலக்கணப் புலமையும் உடைய உரைவேந்தர் ஔவை துரைசாமியாரை வேண்டுமென்றே எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. புறநானூற்றையும்—பதிற்றுப்பத்தையும், ஐங்குறு நூற்றையும், நற்றிணையையும் விளங்க வைத்தாரே அதற்காகவா? தமிழக மக்களின் உண்மை வரலாற்றை உலகறியச் செய்த இராமச் சந்திர தீட்சதரை மறந்துள்ளார். தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் மூல முதலாய் இருந்த பொ. திருகூட சுந்தரனுர், தம் கருத்துகளை எதிர்த்தார் என்பதனுலேயே அளவற்ற அவர் பணியைத் தம் காழ்ப்புக் குணத்தால் மு.வ. மூடி மறைத்துள்ளார்.

அகன்ற கடலையும், வானையும் தம் முயற்சியால் மூடி மறைக்க முனைந்த மு.வ. தம்மிடம் பயின்றவர்கள், தம்மிடம் முன்னுரை வாங்கியவர்கள் தமக்குச் சோறு போட்டவர்கள், தமக்கு வேண்டியவர் அனைவரையும் தலை எழுத்தைக் கூட விடாமல் இக்காலப் பாட்டிலக்கியம் என்னும் பெயரில் குறிப்பிட்டுள்ளார். இவ்விடங்களில் சாகித்திய அகாதமியின் பக்கச் சுவர் இவருக்கு இடையூருகத் தெரியவில்லை போலும். உமா மகேசுவரரை மறக்கும் உள்ளமுடைய தமிழ்ப் பேராசிரியர் மு.வ. பாரதியாரைப் பற்றி 12 பக்கம் எழுதி, உலகப் பாவலர்களின் வரிசையில் இடம் பெறும் பாரதிதாசனைப் பற்றிமட்டும் 6 பக்கங்களிலே தம் கருத்தை முடித்துக் கொள்கிருர். பேராசிரியர் மு.வ. விற்கு இலக்கண அறிவுகூட இல்லை என்பதை நூலைப்படித்த பிறகுதான் தெரிந்து கொள்ள முடிந்தது. கழைக் கூத்தாட்டத்தைப் பாட வந்த பாவேந்தர் இணைக்குறள் ஆசிரியப் பாவைக் கையாள்கிருர். அதனைப் பேராசிரியர் மு.வ. புது வகையான செய்யுள் வகை என்கிருர். பாவேந்தரின் நூல்களைப் பார்த்திருக்கிருரா என்பதுகூட ஐயமாக உள்ளது.

கம்பராமாயணத்திற்குப் பல பக்கங்களை ஒதுக்கிய மு. வ. இராவண காவியத்திற்கு ஒரு பக்கத் திறனாய்வும் எழுதக் கூசுவதேன்? பேராசிரியர் மு.வ. இலக்கிய வரலாற்றினை எழுதுகிற போது, படைப்பிலக்கியங்களைப் பார்க்காமல் பாரி நிலையத்தின் பொத்தகப் பட்டியலைப் பார்த்தே நூலை எழுதியுள்ளார் போலும். பாவலர் வாணிதாசன் எழுதிய இரண்டு பாவியங்கள் 'தமிழச்சி', 'கொடி முல்லை' மட்டுமே. மு.வ. விற்கு, 'தொடுவானம்' என்ற அழகின் சிரிப்பின் நிழலான அழகின் வண்ணனை நூலும் பாவியமாகத் தோன்றுகின்றது. முடியரசன் இயற்றிய இசைப் பாடல் தொகுதியை, 'காவியப் பாவை' என்ற பெயரைக் கண்டே ஒரு சிறு பாவியம் என்று எழுதியுள்ளார். இதற்கு மேலும் தம் அறியாமையைப் புலப்படுத்த கி. வா. சகந்நாதனையும் பல இடங்களில் பாவலர் என்று கூறுகிறார்.

இலக்கிய வரலாறு என்பது வெறும் நூல்களின் பட்டியல், ஆசிரியர்கள் பட்டியல் என்பதாக இருக்கவேண்டுமென்று குறிக்க விரும்பவில்லை. திறனாய்வு என்ற இலக்கிய மதிப்பீட்டோடும் வருவது-தான் இலக்கிய வரலாறாகும். எல்லாரும் பொதுவாகக் கருதுகிற நூலமைதி என்ற நடுநிலையைத் துலாக்கோல் போல இருந்து செய்வதுதான் கற்றறிந்த அறிஞர்க்கு அழகு. ஒரு சமயத்தை உயர்த்தியும் மறு சமயத்தைத் தாழ்த்தியும் ஒரு சிலரை மறைத்தும் ஒரு சிலரை குறைத்தும் மதிப்பிடுவதும் விருப்பு வெறுப்புக் காட்டுவதும் கீழானவர்கள் செய்யும் தாழ்வான செயலாகும். ஆனால் அதைப் பேராசிரியர் மு.வ. செய்வது அவருக்கு அழகன்று அறிவுடைமையன்று.

நன்றி. **முல்லைச்சரம்**

---


# 'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: **உலக முதல்வி**

**0** தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா

**இன்றே உறுப்பினர் ஆகுங்கள்**

'தமிழம்' 17, நாகப்ப முதலி தெரு, சென்னை-2:




"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

---

## டாக்டர் கலைஞர் கருணாநிதி தோழிவிடு தூது.

ஆசிரியர்: புலவர் ஆனைநரசிங்கப் பெருமாள்.
கிடைக்குமிடம்: பூமகள் புத்தக நிலையம்,
எல்டாம்சுசாலை, சென்னை-600018.
பக்கங்கள்: 48. விலை: 1-50.

இக்கால் தமிழக முதலமைச்சராய் இருக்கும் கலைஞர் மு. அருட் செல்வனுரைத் தலைவராகக் கொண்டு பாடப் பெற்றுள்ளது, இத் தூது நூல். " இந்நூல் ஒரு வரலாற்றுக் காப்பியம் எனின் மிகை-யாகாது....வரும் நூற்றுண்டு மக்கள் இவ்விலக்கியத்தைத் தம் உயிரினும் மேலாக மதித்துப் போற்றுவர். ஆனுல் நம் காலத்து மக்கள்?....தமிழ் அழியாத வரை (அழிய வேண்டுமா என்ன?) இந்-நூல் அழியாது.... தோழி விடு தூது தன்னிகரற்றது; சுவை மிக்கது பல்கலைக் கழகங்களில் பாட நூலாக அமைக்கப் (?) பெறுதல் இன்றியமையாதது...கால வெள்ளத்தால் அழியாத, என்றும் நிலைத்த புகழுடைய இந்நூலை நானே இயற்றினேன்"—இப்படியெல்லாம் தற்பெருமை சாற்றி 'என்னுரை' எழுதியுள்ளார், நூலாசிரியர் புலவர் ஆனை. நரசிங்கப் பெருமாள்.

தமிழன்னையின் கட்டளைப்படி திருவள்ளுவர் காஞ்சியில் (காலஞ் சென்ற) அறிஞர் அண்ணுவாகவும், கம்பர், இளங்கோ, இராசராசன் ஆகிய மூவரும் அருட்செல்வராகவும் பிறந்ததாக ஆசிரியர் கற்பனை செய்துள்ளார். ஆரியர் தோற்றுவித்த புராணப் புளுகுகளை மூட்டை கட்டிக் கொளுத்த முடியாமல் தமிழ்த் தலைவர்கள் திணறிக் கொண் டிருக்கும் இந்நேரத்தில்—செவ்வாய் மண்டிலக் காலத்தில்—அறிவுக்

கொவ்வாத புதுப் பொய் மூட்டைகளை (கற்பனை எனும் பெயரில்) இப்படி அவிழ்த்து விடுவது மிகக் கண்டிக்கத் தக்கது! மேலும் நூல்–தலைவர் அருட்செல்வர் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்த ஒருவர் என்பதை ஆசிரியர் எப்படி மறந்தாரோ தெரியவில்லை.

இனி நூலைப் பார்ப்போம். 'அன்னை அஞ்சுகம் வாழ்த்'தில்
"எல்லோர்க்கும் நல்லவனை இவ்வுலகில் பெற்றதாயே
வல்லபுகழ் வாழ்க மகிழ்ந்து."

என்று வருகின்றது. கலைஞர் தம் அன்னையாரின் புகழ் மகிழ்ந்து (?) வாழுமாறு பாடி மகிழ்கிறார், நூலாசிரியர்! ஒருகால் அஞ்சுகம் அம்மையார் மகிழ்ந்து வாழ்க என்னும் பொருளில் பாடியிருப்பாரே யானால் (அவ்வாறிருக்க முடியாது; ஏனெனில் அவ்வம்மையார் இன்றில்லை) 'வல்லபுகழ்' என்னும் சொல் பயனற்ற தாகின்றது. 'பெற்றதாயே' என்னும் சீர் ஓசை மிகுந்து-விட்டிசைத்துச் செப்பலோசையினின்று பிறழ்வதைக் காணுகின்றோம். இதே போல் முத்து–வேலர் வாழ்த்திலும் "அன்னோன் பேர்....வாழ்க இனிது" என்பதிலும் செப்பலோசைப் பிறழ்ச்சியைப் பார்க்கின்றோம். மேலும், வறிதே பாராட்டப் பெறும் இந்நிலைகளும் மிகையானவை.

'அடுத்து, மாநில சுயாட்சிப் போர்முழக்கம்' முதல் பாட்டு முதலடியிலேயே 'செங்குட்டுவன்' என்னும் கனிச்சீரைப் போட்டு ஓசையைக் காயாக்கும் அவர் அவ்வடியின் ஐந்தாம்சீரைப் 'பொன்னிகர்க்கும்' என்றெழுதாமல் பொன்னிகரும் என்று பிழையாக எழுதுகின்றார். இஃதை அச்சுப் பிழை என்று சொல்ல வியலாது. இரண்டாம் பாட்டில் 'அறுத்திட்டார் பிணம் போலத் தமிழகத்தைத் தீயோர்" என்று தமிழகத்தைப் பிணத்திற்கு ஒப்பாகு மாறு போலப் பாடியிருப்பது தாழ்வான உவமையாகும்.

நூலாசிரியர் "ஐந்திலக்கண வித்தகர்" என்னும் அடைமொழி கொண்ட தமிழ்ப் புலவராகவும் செந்தமிழ் (மாலை நேரக் கல்லூரி முதல்வராகவும் தம்மை அறிமுகப்படுத்தியிருப்பதால் நூலில் உள்ள கீழ்க்காணும் (எடுத்துக் காட்டுகள்) பிழையான சொற்களும், கூறியது கூறலும், பொருந்தாத அடைமொழி–உவமைகளும், இழிமொழிகளும் பிழையான யாப்பும், முரண்பாடுகளும் அவர்க்குப் படையல் செய்ய நேர்கின்றது.

**பிழையான சொற்கள்:**

1. ஊர்பேர் (கண்ணி. 40)–ஒற்று மிகாமை

2. வீடுடன் (க. 233) ,, ,,
3. சேர்த்தனர் தானுக (க. 39,40) ஒருமை பன்மை மயக்கம்.
4. வருமோர் கவிதைகள் (க. 162)- ,, ,, ,,
5. மலர் தூய் க. 6)- 'தூஉய்' அல்லது 'தூவி' எனல் வேண்டும்.
6. கற்றதோர் பாவலன் (க. 280)-திணை மயக்கம் (கற்ற வோர் எனல் வேண்டும்.)

கூறியது கூறல்: (கலைஞரின் பண்பு நலன்கள்)

1. முத்தமிழ்க் காவலன் (க. 98, 113, 130, 131)
2. நாவலன் (க. 98, 102)
3 பாவலன் (க. 98, 102, 117)
4. வள்ளல் (க. 100, 107, 109)
5. கலைஞன் (க. 100, 112)
6. அறிஞன் (க. 106, 114, 133, 139)
7. ஏழையரை முன்னேற்றுபவன் (க. 103, 106, 115, 136, 140, 144)
8. புலவன் (105, (142)

பொருந்தா அடை மொழிகள்:

1. தூய தோர் வீரத்தில் (க. 77)
2. பண்புத் திருவாரூர் (க. 88)
3. கூர் விளக்காய் (க. 96)
4. சுவையாரும் கைகள் (க. 185)
5. பண்வாழ் விரலாவான் (க. 188)
6. கோவிலினும் நல்லதோர் கொள்கை (க. 247)
7. பண்ணூர் திருத்தோளும் (க. 250)

பொருந்தா உவமைகள்:

1. "ஆட்டுக்குத்
தோலுரித்தாற் போலத் துகிலின்றி நிற்கின்ருய்"
(க. 18, 19)

—விண்மகளிர் காட்சி

2. "கண்போல் விரைந் தேகு" (க. 175)

—தோழியிடம் தலைவி கூற்று

3. "தேனுக....சிரித்து" (க. 55)

-வள்ளுவர் சிரிப்பு

இழி மொழிகள்:

"இந்நூலைக் கற்பவர் தலைவியின் சொல்லழகில் ஈடுபட்டுத் தம்மை மறப்பர்" என்று 'என்னுரை'யில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். கற்பார் சொல்லழகில் (!) ஈடுபட்டுத் தம்மை மறப்பாராக!

1. "என்னைப் புணரா திருக்குநாள் ஒவ்வொன்றும்
பொன்னுடையாய் வீணாளாய்ப் போகுமே" (க. 186)

2. "ஊற்றினைப்போல் இன்பம் உவந்தளித்தான்" (க. 193)

3. "முயங்கி மயக்கி முடிவிலா இன்பம்
தயங்கா தளித்தான் தமிழன்" (க. 200)

4. "எடுக்கக் குறையாத இன்பம்–கொடுப்பாய்" (க. 223)

6 "எற்புணர்ச்சி ஏற்பாய் இனிதாக" (க. 279)

7. விரலெல்லாம் நண்டாகி வேண்டும்–இரவெல்லாம்
என்னுடலில் மெல்லமெல்ல ஏறி நடந்தனவே" (க. 202)

இங்கு அகப் பொருள் இலக்கணம் வழுவுவதை விரித் துரைக்கலாம்.

**பிழையான யாப்பு;** 'ஆணையென' (பக் 3) 'ஈகை யெனும்' (பக் 19) என்னும் சொற்களுக்கு 'ஐகாரக் குறுக்கம்' என்று அடிக்குறிப்பு எழுதி (தேவையின்றி) யாப்பமைதி கூறும் நூலாசிரியர் 'இக்காசினி காணுதார்' க. 24) என்று வஞ்சித் தளை தட்டுங்கால் அடிக்குறிப்பு ஒன்றும் எழுதக் காணேம். "தன்னை அறிந்துதமி ழோதிய–மன்னவனே" (க.255) என்னும் கண்ணி யிலும் வெண்பா யாப்பு பிறழக் காண்கின்றோம். இங்கே "தன்னை அறிந்து தமிழோதிய–மன்னவனே" என்று வகையுளி செய்ய இட முண்டு. செய்யின், மோனை இல்லாமற் போகின்றது. ஆக, வகையுளி செய்தல் ஆசிரியர் கருத்தாக இருக்க வழியில்லை. மற்றும். கூடலூடல் (க. 7), பிரமனுணன் (க. 167), பேசுதேனே (க. 177) கணவனுவான் (க. 224) போன்ற இடங்களில் செப்பலோசையின் செப்பங் குறைதல் காணலாம்.

**முரண்பாடுகள்:** தமிழை அன்னையாக உருவகப் படுத்திப் பாடும் ஆசிரியர் (வேசிமொழி வந்தென்னை ஆளவும் க. 70) கீழ்க் காணும் இடங்களிலும், இன்ன பிற இடங்களிலும் தமிழைப் பட்டாக்கைப் படுத்திப் பாடுகின்றார்.

"செந்தமிழில் வீரமுடன் சீர்காதல் பாடினீர்"-(க. 68)

"நந்தமிழ்
வாழ வளர வழியென்ன செய்வீரே" (க. 69)

"பைந்தமிழ்
"வாழஅழைத்தனன் வள்ளுவனை" (க. 54)

"பணங் கொடுத்துப் பைந்தமிழைப் பாரில் கெடுத்து" (க. 25)

மற்று, ''தக்கோர்கள் சூழத் தனியிருந்தாள்'' (க. 26) என்றவாறு முரண்பட்டுப் பாடி மயக்குமிடங்கள் உள.

இனி, 'இருபதாம் நூற்றுண்டின் வரலாற்றிலக்கியம்' என்று நூலின் அட்டையிலேயே கொட்டை எழுத்துகளில் போடப் பெற்றுள்ளது.

''துணிவொன்ருல் வெல்கின்ற தூயோன்'' (க. 135)
''திரைப்படத்துன் தீர உரையாடல் கேட்டேன்'' (க. 257)
''நாடகத்தில் நீ நடித்தாய் நான்கண் டெனமறந்தேன்''
(க. 258

என்று கலைஞரைச் சிறப்பித்துப் பாடும் சில விடங்களிலும் கலைஞரின் (தமிழக அரசின்) திட்டங்களைச் சுட்டும் இடங்களிலும் தவிர்த்துப் பிறவிடங்களில் தம் விரும்பம் போல் கதை யளக்கிருர். காட்டுகள் வருமாறு.

''காரியோரி
பாரியும் ஒப்பாகாப் பாரின் கொடைவள்ளல்'' (க. 169)
''புலமைத் தலைமைப் புலவன்'' (க 142)
''வினையால் பிரமனுறுன் வேந்தன்'' (க. 167)
''வார்மண் அடியளந்த மாலானுன்'' (க. 168)
''சீர்வாழ் சிவனுய் உருக்கொண்டான'' (க. 169)

இப்படித் தக்கார் ஒருவரைத் தகுதிக் கொவ்வாமல் பாடுவது தகுதியையும் தகாமையாகக் கருதும்படி செய்த தாகிவிடும் என்பதை ஏனோ ஆசிரியர் உணராமல போய்விட்டார். இடைக்காலப் புலவர்கள் சிக்கிய புளுகுச்சேற்றில் இவரும் சென்று மாட்டிக் கொண்டாரே! (''கண் மூடிப் பொய்மைகள்....சேர்ந்தனவே (க. 46) என்று பாடுபவரும் இவரே''.)

மற்று, தன்னுட்சி வேட்கையும் தமிழ்ப் பற்றும், இந்தியெதிர்ப் புணர்ச்சியும் கொண்ட ஆசிரியர்-(அதற்குப் பாராட்டியாகல் வேண்டும்) உணவின் பெயரும் வடமொழியாபிற்றே என்று வருந்துபவர் (பக். 8) கீழ்க்காணுமாறு வட-அயற் சொற்களைத் தாராளமாய்க் கலந்து பாடுகின்ருர். அவை வருமாறு. 'காசினி, வேசி, அவனி, கவி, சக்தி, சுயாட்சி, சிந்தித்தல், சிங்கம், இதயம், சாதனை, டாக்டர், வாக்கு, ஆணை, வில்லி, புந்தி, சீலம், நதி, சாதனை, சாத்திரம், நீதி, தரணி, கருணை முதலியன. இவ்வாட்சி ஆசிரியரின் கொள்கைக்கும் மாசு கற்பித்து விடுகின்றது. இவ்வகையிலும் அவருக்குத் தோல்வியே! பாராட்டு-பவரும் பாராட்டுப்பெறுபவரும் தகுதியான தமிழர்கள் என்பதாலேயே, தமிழுக்கு இழுக்கு நேர்வதைப் பொறுத்துக் கொள்வது சிறப்பாகாது. ஆசிரியர் முயற்சி தமிழையும் தமிழ் மரபுகளையும் நிலைநாட்டுவதாக அமைதல் வேண்டும். அந்நிலையே எதிர்காலத் தமிழகத்திற்கு மிகவும் பயன்படுவதாகும். —அன்பு.

# திருமண அழைப்பிதழ்.

பேரன்பு கனிந்த உ.த.க. தென்மொழி அன்பரீர்! வணக்கம்.

நிகழும் திருவள்ளுவராண்டு உ௰௪, நளி மாதம் 20-ஆம் பக்கல் (5—12—73) அறிவன் கிழமைக் காலை 9-00 மணி முதல் 10-30 மணிக்குள் அடியேற்கும் மதுரை மாவட்டம், பழனி வடக்குத் தேர்த்தெரு. திரு மருதாசலனார் அவர்கள் மகள் திருவளர்செல்வி ம. ஞானத்திற்கும் அதே தெருவில், வைரவன் கோவிற்கு அருகில் உள்ள மல்லிமட த்தில், திருமணம் நடைபெற உள்ளது. பெருஞ்சித்திரனார் வாழ்த்துரை வழங்குவார்.

அனைவீரும் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து வாழ்த்த வேண்டுகிறேன்.

பாரதி தெரு,<br>
பு. புளியம்பட்டி,<br>
12--11—1973.

ப. கு. முருகவேள்,<br>
அமைப்பாளர்,<br>
கோவை மாவட்ட உ.த.க.

---

## மணமகளும் மணமகனும் தேவை!

அரசினர் கலைக் கல்லூரியில் ஆசிரியராய் இருக்கும் எனக்கும் பள்ளியிறுதி வகுப்பு முடித்துப் பணியின்றியிருக்கும் என்னுடைய தங்கைக்கும் முறையே மணமகளும் மணமகனும் தேவை.

இருவர்க்கும் தனித்தமிழ்ப்பற்றும், பகுத்தறிவுப் பற்றும் இருப்பின் நல்லது. இருவரும் எங்களைப்போல் தமையன் பணியிலும், தங்கை பணியின்றி இருப்பினும் சரியே.

மணமகன் உருபா 350க்குமேல் சம்பளம் பெறுபவராய் இருப்பின் நல்லது. கல்லூரியிலோ அல்லது உயர்நிலைப் பள்ளியிலோ ஆசிரியராய் இருப்பினும் சரியே. அல்லது பிற அலுவலகங்களில் பணியாற்றினுஞ் சரியே. இரண்டு திங்களுக்குள் தொடர்புகொள்க.

ஒப்பம் (பொ. பொன்னரசன்)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி—

பொ. பொன்னரசன் க.மு:, (பொ. தங்கராசன். க.மு.,)<br>
ஆங்கிலத்துறை, அரசினர் கலைக்கல்லூரி,<br>
உடுமலைப் பேட்டை அஞ்சல்,<br>
கோவை மாவட்டம்.

---

## 'தென்மொழி'க்கு நன்கொடை.

16-11-71 முதல் 8-2-72 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

| | உருபா |
|---|---|
| மறைமலையடிகள் மன்றம். பு. புளியம்பட்டி [நவம்பர்]. | 4-00 |
| மாணவர்கள், அரசினர் கலைக்கல்லூரி. முதுகுன்றம். | 10-00 |
| திரு. LAC. நடராசன் மே/பா. 56-A.P.O, | 1-00 |
| திரு. புலவர். பெ. பொன்னுசாமி. செக்க சமுத்திரம். | 1-00 |
| தென்மொழியன்பர் ஒருவர்-தரங்கம்பாடி. | 5-00 |
| திரு. இ. மகிழ்கோ-புதுவை. | 0-81 |
| திரு. ப. தங்கவேலு. மைசூர். | 5-00 |
| மறைமலையடிகள் மன்றம் பு. புளியம்பட்டி. | 2000-00 |
| அறிஞர் அண்ணா நூல்நிலையம்-குவாகம். | 1-00 |
| அரசர் கல்லூரி மாணவர்கள்-திருவையாறு. | 5-00 |
| மறைமலையடிகள் மன்றம் பு. புளியம்பட்டி [திசம்பர்]. | 3-00 |
| திரு. பா. இராமசாமி-உறைந்தைராயன் குடிக்காடு. | 1-00 |
| திரு. இரா. ப. சதானந்தன்-போடிமீனாட்சிபுரம். | 3-00 |
| திரு. க. பாண்டியன் மே/பா. 56. A.P.O. | 3-00 |
| மறைமலையடிகள் மன்றம் பு. புளியம்பட்டி [சனவரி]. | 3-00 |
| திரு. எசு. மச்சபாலகிருட்டிணன்-மலேசியா. | 3-75 |
| திரு. சாமுவேல் ஆபிரகாம்.க.மு. அறி. மு. மதுரை-13. | 3-00 |
| திரு. இரா. வெற்றியரசு-நெய்வேலி. | 10-00 |
| திரு. சி. அறிவுறுவோன்-அம்மையகரம். | 4-50 |
| திரு. கோ. வைத்தியலிங்கம்-உத்திரக்குடி. | 0-25 |
| திரு. இரா. ப. சதானந்தன்-போடிமீனாட்சிபுரம். | 3-00 |
| திரு. CPL. அழகர்சாமி-பெரல்லி. | 6-00 |

[தொடரும்]

## முத்து-தென்னவன், மனோன்மணி-நீடுவாழி!

கடந்த துலைத்திங்கள் 19-ஆம் நாள் (4—11—73) தெ. ஆ. மாவட்டம் தொழுதூர் மணமகன் இல்லத்தில் ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தென்மொழி அன்பர் திரு. முத்து-தென்னவனுக்கும், செல்வி மனோன்மணிக்கும் திருமணம் சிறப்பாக நிகழ்ந்தேறியது. பலரும் வந்திருந்து வாழ்த்துக்கூறி மகிழ்ந்தனர். தென்மொழியும் மணமக்கள் நீடுவாழ உளமார வாழ்த்துகிறது.

(24-ஆம் பக்கத் தொடர்ச்சி)
அக்கால் இந்தியா முழுவதும் சமசுக்கிருதந்தான் பொது மொழியாக இருந்தது. அதன்வழியாக-அதனின்றுதான் தமிழ் வந்தது என்னும்படி தமிழைப் படித்தார். இப்பொழுது அதைவிடக் கேடாக இருக்கிறது. வரவரக் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவுந் தேய்ந்து சிற்றெறும்பாகி, பிறகு ஒன்றுமில்லாமற் போன வகையில், தேய்ந்து காய்ந்து தேரைக்கால் போல ஓய்ந்து வருகிறது இந்த உலகத் தமிழ் மாநாடு. அதுவும் முன்பு நடந்த பாரீசு உலகத் தமிழ் மாநாட்டில், மொகஞ்சதோரா நாகரிகம் திராவிடருடையதா ஆரியருடையதா என்று ஆராயும் பொறுப்பு யாரிடத்தில் ஒப்படைக்கப் பெற்றது தெரியுமா? நான் சொன்னேனே இந்த ஐராவதம் மகாதேவனிடத்தில். அஃதாவது பிராமி எழுத்திலிருந்து தமிழ் எழுத்து தோன்றியதென்று சொன்னாரே அவரிடத்தில். இப்படியெல்லாம் செய்கிற பொழுது, அவர்கள் (காமில் சுவலெபில் போன்றவர்கள்) ஏன் அப்படி எழுதமாட்டார்கள் என்று கேட்கின்றேன். தேளுக்கு அதிகாரம் கொடுத்தால் நிமையத்திற்கு ஒரு முறை கொட்டும். இனி; ஒரு முறை மட்டுமன்று; மூன்று முறை, பன்முறையுங்கூடக் கொட்டும். அதைப் பிடித்து வைத்துக் கொண்டு கொட்டுகிறதே கொட்டுகிறதே என்று சொன்னால் அந்த முட்டாளுக்கு நாம் என்ன சொல்வது? 'நன்றாகக் கொட்டட்டும்' என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி, தமிழுக்குப் பகைவர்களாகவே, வெளிப் படையாக அப்படி உள்ளவர்களையே கருத்து மாறுபாடுள்ளவர்களையே பார்த்துத் தலைவர்களாக வைத்திருப்பார்களா?

நீலகண்ட சாத்திரியாரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் இந்தியாவிலேயே சிறந்த வரலாற்றறிஞர். அவருக்கீடாக ஒருவருமே இல்லை. அவர் அவ்வாராய்ச்சிக்கு வேண்டிய சிறந்த கருவி நூல்களையெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறார். நூல் தொகுப்பில் அவரை டார்வினுக்கு அடுத்த படியாகச் சொல்லலாம். ஆனால் அவர் ஒரு தமிழ்ப் பகைவர். வேண்டுமென்றே தமிழுக்கு மாறாக, உண்மைக்கு மாறாக எழுதி வைத்திருக்கிறார். சமசுக்கிருதத்தைப் பற்றியோ ஆரியத்தைப் பற்றியோ சொல்லுவதென்றால் துரும்பைத் தூணாக்குகிறார். தமிழைப் பற்றியோ தமிழரைப்பற்றியோ சொல்லுவதென்றால், தூணைத் துரும்பாக்குவது மட்டுமில்லை; ஒன்று மில்லாதபடி ஆக்கி விடுகின்றார். அவர் ஏராளமாக நூல்கள் எழுதியுள்ளார். முதலில் அவர், History of South India என்று ஒரு பொத்தகம்

எழுதினார். அதிலே அவர், மு. இராகவய்யங்கார் சொன்னதைத் துணைக்கொண்டு, அஃதாவது, 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்று தொல்காப்பியத்திலே ஒரு நூற்பா இருக்கிறது; இதில் உள்ள ஐயர் என்ற சொல்லுக்குப் பிற்காலத்து வழக்கைத் துணையாகக்கொண்டு, ஆரியர் என்று பொருள் கூறிவிட்டார். அவரும் (அஃதாவது நீலகண்ட சாத்திரியாரும்) அதை ஒப்புக்கொண்டு, 'தமிழர்கள் அக்காலத்தில் மணமுறையில்லாமல் விலங்குகள் போல் திரிந்தார்கள்; அவர்களுக்கெல்லாம் மணமுறையை ஏற்படுத்தி வைத்தவர்கள் ஆரியப் பிராமணர்கள் என்று எழுதி வைத்திருக்கிறார். பிறகு Historian Culture of the Tamils என்று ஒரு பொத்தகம் எழுதினார். அதிலே, கால்டுவெல், 'கொற்கையிலேதான் தமிழ் நாகரிகம் தோன்றியது; அக்காலத்திலே தமிழர்கள் நாகரிகத்தின் தொடக்க நிலையிலே இருந்தார்கள் என்று, எழுதி வைத்ததை அடிப்படையாகக் கொண்டு, இவரும் அப்படியே எழுதி வைத்து விட்டார். அக்காலத்தில் கால்டுவெல்லுக்கு வழிகாட்ட வல்ல தமிழ்ப் புலவர் ஒருவரும் இல்லை. ஆனால் நம் மனோன்மணியம் சுந்தரனார் அவர்கள் 1908-இலேயே 'India proper in the South' தென்னாடுதான் உண்மையான இந்தியா—என்றார் 'Indian Antiquary' என்ற ஓர் இதழிலே! அதற்குப் பின்னால் 1912-இல் இந்திய வரலாற்றை எழுதிய வின்சென்ட் சிமித் என்ற ஆங்கிலேயர் (அவர்தாம் இந்திய வரலாற்றை ஓரளவு சிறப்பாக எழுதியவர்) இந்தக் கருத்தைத்தழுவி, 'இந்தியாவின் வரலாற்றைத் தென்னாட்டிலிருந்துதான் தொடங்க வேண்டும்' என்று மிகத் தெளிவாக எழுதியுள்ளார். 'To find the basic element of Hindu Culture, by a study of Sanscrit and the history of Sanscrit in the upper India, is to begin the problem and its the worst and most Cemplicated points' என்று சொல்கிறார். மேலும் அவர் "இந்நூல் வரலாற்றுக்குச் சிறந்த வழிகாட்டியாக விருக்கிறது. நான் அயல் நாட்டானாக விருக்கிற படியால், இந்த நூல் கருத்தின்படி என்னால் வரலாற்றை எழுத முடியவில்லை. பின்னால் இந்திய வரலாற்றை விரிவாக எழுதப்போகும் ஒரு வரலாற்றாசிரியர் இந்த நூலைக் கடைப் பிடித்து, அந்நூலாசிரியர் கூறுகிறபடியே இந்திய வரலாற்றை எழுதுவாராக' என்று குறிப்பிடுகின்றார். ஆனால் நீலகண்ட சாத்திரியாரோ, வேண்டுமென்றே, "அவர் இப்படிச் சொல்லியுள்ளார்; இவர் அப்படிச் சொல்லியுள்ளார்" என்று

தம் விருப்பம் போலவே எழுதி வருகிறார். அவர் எழுதியதாகச் சொன்னேனே History of South India-அந்த நூலில், 'தமிழர் ஆறு இனம் சேர்ந்த ஒரு கலவை இனம்' என்று சொல்லியிருக்கின்றார். நீக்ரோ இனம், ஆத்திரேலிய இனம், அர்மீனிய இனம், மங்கோலிய இனம், நடுக்கடற் பகுதியில் வாழ்ந்த ஒரு மக்களினம் முதலிய ஆறு கலவையினம் என்று சொல்லியிருக்கின்றார். இதையெல்லாம் படிக்கின்றபொழுது எப்படியிருக்கின்றது தெரியுமா? இப்படிப்பட்ட நூல்களை இந்தக் காலத்திலே எழுதும்படியும் தமிழர்கள் விட்டுக் கொண்டிருக்கின்றார்களே என்று வருந்த வேண்டியுள்ளது. இந்த நிலைகள் வேண்டுமானால் எல்லாருக்கும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் படித்தவர்களுக்காகிலும் தெரிய வேண்டுமா, இல்லையா? இப்படிப்பட்ட நூல்கள் வந்து கொண்டுதாம் இருக்கின்றன. வாங்கப் பெற்றுப் படிக்கப் பெற்றும் வருகின்றன. ஆனால் இவற்றையும் படித்துக் கொண்டு 'எங்கெழின் ஞாயிறு எமக்கு' என்று கவலைப் படாமலுந்தாம் இருந்து வருகின்றனர். இப்படிப்பட்ட நிலைகள் தங்களையும் கெடுத்துக் கொள்வது மட்டுமன்று, தங்கள் முன்னோரையும் பழிக்கின்றதுமாகும். இப்படியிருந்தால் தமிழர் மாந்தர் என்று சொல்லிக் கொள்வதில் என்ன பயன் ஏற்படும்?

மாந்தனின் வளர்ச்சி வெறும் உடல் வளர்ச்சி மட்டுமில்லை. உள்ளுயிர் இருக்கின்றதே அதுதான் மாந்தன். அந்த அகக் கரண வளர்ச்சியடையா விட்டால் மாந்த நிலையை அடைய முடியாது. வெறும் உடம்பு மட்டும் வளர்வதாக வைத்துக் கொண்டால் அஃது அஃறிணை நிலை என்றுதான் நாம் சொல்லுதல் வேண்டும். அதனால்-தான் நாம் இதைப்பற்றியெல்லாம் சொல்ல வேண்டியிருக்கின்றது. பகுத்தறிவு, நெஞ்சுரம், தன்மானம் இந்த மூன்றும் இல்லை பலருக்கு. அவற்றை ஆரியன் நன்றாகச் சுரண்டி எடுத்து விட்டான்; துளிக் கூட இல்லை. இதைப்பற்றி ஏதாவது நாம் சொன்னால், உண்மையிலேயே சினம் மூளவேண்டியதற்கு மாறாகச் சிரித்து மழுப்புகிறார்கள்.

இன்னொன்று, An advance history of India என்று ஒரு நூல் எழுதி வெளியிட்டிருக்கின்றார்கள். அந்த நீலகண்டசாத்திரியாரும். வி. என் சீனிவாசாச்சாரியார் என்பவரும் சேர்ந்து எழுதிய நூல் அது, அஃது ஓரளவு பெரிய நூல். இருபத்தைந்து உருபா விலை. அதிலேயும் தமிழர்களைத் தாழ்த்தியே எழுதி வைத்திருக்கின்றார். அவர்கள்

தமிழரைப்பற்றிய வரலாற்றைத் தொடக்குவதெல்லாம் கி.மு. மூன்றும் நூற்றூண்டிலிருந்துதான். மெகசுதனிசு என்ற நாடுகாணி முதன் முதல் பாடலிபுரத்திற்குப் போனுனே (பாடலிபுரம் என்பது பாட்னு) அந்தக் காலத்திலிருந்துதான் இந்திய வரலாற்றையே தொடங்குகிருர்கள். இக்கால் புதியதாக ஒரு நூல் வந்திருக்கின்றது. சுப்பிரமணியம் என்னும் பேராசிரியர் ஒருவர் மதுரைப் பல்கலைக் கழகத்-தில் இருப்பவர். அவர் தெ.பொ.மீயால் அமர்த்தப் பெற்றவர். (அவரும் இன்னெருவரும் தமிழ்ப் பேராசிரியர்களாகத் தெ. பொ. மீயால் அமர்த்தப் பெற்றனராம். அவர்கள் இருவரும் தங்களுக்குள் நான் பெரியவன், நீ சிறியவன் என்று திருமாலும் பிரமாவும் போரிட்டுக் கொண்டது போலப் போரிட்டுக்கொண்டு இருந்தார்களாம். அதன் பின் மு.வ. அங்குப் போய்ச் சேர்ந்த பின் இருவரையும் இரண்டு துறை-களுக்குப் பேராசிரியராக்கி அமைதிப்படுத்திஞராம். நம் பேராசிரியர்-கள் இப்படிப்பட்ட வகைகளில்தாம் போரிட்டுக் கொண்டிருக்கின்ருர்களே தவிர, தம் மொழிக்கோ இனத்துக்கோ ஏற்படுத்துகின்ற இழிவுகளைக் கவனிப்பதில்லை. பணத்தொகுப்பு, பதவி உயர்த்தம் முதலியவற்றில் இருக்கும் கருத்து இதிலெல்லாம் இருப்பதில்லை (அச்-செய்தி இருக்கட்டும்). அந்த சுப்பிரமணியம் என்பவர் எழுதிய நூல் இது. (நூலைக் கையிலெடுத்துக் காட்டி) இதன் விலை முப்பத்தைந்து உருபா. இருப்பது முந்நூற்றைம்பது பக்கந்தான்! விலையோ அளவு கடந்தது. இவரும் இதில் என்ன செய்திருக்கிருர். திராவிடர் ஒரு கலவை இனத்தார்' என்று எழுதி வைத்திருக்கிருர். மேலும், "சிலர் சொல்லுகிருர்கள், திராவிடர்கள் தென்னுட்டில் தோன்றியவர்கள் என்று; ஆனுல் நன்ருக ஆராய்ந்து பார்த்தால் மேனுட்டிலிருந்து வந்தவர்கள் போல் தெரிகிறது" என்று எழுதுகிருர்.

இரண்டு பிராமணர்கள், (இஃது ஓர் அரிய வாய்ப்பு. இறைவன் நமக்குக் கொடுத்த ஒரு பேறு என்றே நாம் நினைக்க வேண்டும்) பெரிய வரலாற்ருசிரியர்கள்; நம் கருத்துக்குச் சார்பாக, நாம் சொல்லி எழுதினது போலவே எழுதி வைத்திருக்கிருர்கள். அந்த இருவர் யார் என்று சொன்னுல் பி.டி. சீனிவாச அய்யங்கார் ஒருவர்; இராமச்சந்திர தீட்சிதர் என்பவர் ஒருவர். பி.டி. சீனிவாச அய்யங்கார் பல நூல்கள் எழுதிஞர். அதில் History of the Tamils என்பது ஒரு பெரிய நூல். அதிலே நன்ருக-தெளிவாக விளக்கியிருக்கிருர். "தமிழர் தென்னுட்டின் பழங்குடி மக்கள். அதோடு நாகரிக மாந்தன் தோன்றியது தென்னுடாகத்தான் இருக்க முடியும்" என்று சொல்லி-

யிருக்கின்றார். ஏனென்றால், நாகரிக மாந்தன் வளர்ச்சிக் கேற்ற அந்த நால்வகை நிலங்கள்–குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பவை அடுத்தடுத்து இருக்கின்ற நிலம் இந்த உலகத்திலேயே தமிழ் நாடுதான்; வேறு எங்கும் இல்லை. ஒரே பாலை நிலமாக இருக்கும்; இல்லெனில் ஒரே காடு சூழ்ந்த முல்லை நிலமாக இருக்கும். இல்லெனில் குறிஞ்சியாக இருக்கும். இங்குப் போல் நான்கு நிலங் களும் அடுத்தடுத்து அமைந்த நிலப்பகுதியே உலகத்தில் இல்லை. முதன் முதல் குறிஞ்சி நிலத்தில்தான் மாந்தன் தோன்றியிருக்க வேண்டும். அங்கிருந்து அவன் முல்லைக்கு வந்திருக்க வேண்டும்; அதற்கடுத்தாற்போல் மருதம் இருக்கிறது; அதற்கும் அடுத்தாற்–போல் கடல். அது நெய்தல் ஆகி விடுகிறது. இப்பொழுது எண்ணிப் பார்த்தால், மேற்குத் தொடர்ச்சி மலையை அடுத்துக் காவிரி,வையை முதலியவற்றையும், குமரிமலையையடுத்துக் குமரியாறு, பஃறுளியாறு முதலியவற்றையும் எடுத்துக் கொண்டால், அவற்றை அடுத்து அந்த நால்வகை நில அமைப்புகளும் உள்ளதை நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம். இவற்றையெல்லாம் விரிவாக எழுதி அந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார்.

அடுத்து, சிலர் சொல்லுகிறார்கள், இந்த மொகஞ்சதோரா நாகரிகத்தை ஒத்திருக்கிறது சுமேரிய நாகரிகம், என்று. அந்தக் கருத்தை மிகவும் நன்றாக விளக்கி இராமச்சந்திர தீட்சிதர் அவர் களும் எழுதியிருக்கிறார்கள். "இங்கிருந்து போன தமிழர் தாம் சுமேரிய நாகரிகத்தைப் பரப்பினார்கள்" என்பது அவர் கருத்து. பாபிலோனிய நாகரிகம், சுமேரிய நாகரிகம் என்பவையெல்லாம் பழைமையானவை என்று சொல்லுகிறார்களே, அங்கு ஊர் என்று ஒரு நகர் இருந்தது. அந்த ஊர் என்னும் பெயருடைய ஊரில் அகழ்ந்தெடுக்கப் பெற்ற ஒரு தேக்கு மரம் நம் சேரநாட்டிலிருந்து கொண்டு போனதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். மேலும் பைபிள் என்னும் திருப்பொத்தகத்தில் சொல்லப் பெற்றிருக்கின்றவனும் யூதர்களுக்கு முந்தியவனும் ஆன ஆபிரகாம் என்பவன் பெயரில் உள்ள ஆப் என்னும் சொல்லுக்குத் தந்தை என்று பொருள். அந்த மொழியிலும் ஆப்–அப்பு என்னும் சொற்கள் தந்தையை அஃதாவது அப்பனைக் குறிக்கும். அப்பன் என்னும் சொல் தூய தமிழ்ச்சொல் என்று சொல்ல வேண்டியதில்லை. உண்மை இப்படியெல்லாம் இருக்கிறது.

இனிமேல் நாம் என்ன செய்ய வேண்டுமென்றால், வரலாற்றுத் துறை, கல்வெட்டுத்துறை, பழம் பொருட் கலைத் துறை இந்த மூன்று துறைகளிலும் துறைத் தலைவர்களாகவோ, ஆசிரியர்களாகவோ தன்மானமுள்ள தமிழர்தாம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு பொழுதும் தமிழும் வளராது; தமிழனும் முன்னேற மாட்டான். மதுரைப் பல்கலைக் கழகமாயினும் சரி; சென்னைப் பல்கலைக் கழகமாயினும் சரி. இப்படித்தான் இருக்க வேண்டும். இருக்கும்படி நாம் செய்ய வேண்டும். இனி இத்தகைய (சுப்பிரமணியம் போன்றவர்கள் எழுதிய நூல் போன்ற) வரலாற்று நூல்களையெல்லாம் வகுப்பில் பாடப் பொத்தகமாகப் படிக்கக் கூடாது. தமிழைப் பற்றியோ தமிழனைப்பற்றியோ வரலாற்றுப் பொத்தகத்தில் தவறாக எழுதியிருந்தால் உடனே மாணவர்கள் வகுப்பை விட்டு வெளியேறிவிட வேண்டும். சரியான வரலாறுகள் எழுதப் பெற்றால்தான் அவற்றை வகுப்பில் படிக்கவோ பாடஞ் சொல்லவோ விடலாம். இந்த நிலை ஏற்படுகின்ற வரையில், ஒருவேளை உண்மையான வரலாற்றைத் தெரிவிக்கும் நூல்கள் இன்னும் வெளி வரவில்லை யெனில், மாணவர்கள் பல மெய்யான வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பெடுத்துக் கொண்டாகிலும் கற்கலாம்; கற்பிக்கலாமே!

இது நாள் வரையில் நாம் எத்தனையோ முறைகளில் உண்மைகளை எடுத்துச் சொன்னோம்; எழுதியும் வருகிறோம். இனிமேல் நாம் ஒன்று சேரவேண்டும்- அப்பொழுது உண்மையில் இதற்கென ஒரு போராட்டமே தொடங்க வேண்டியிருக்கும். அதற்கு ஒரு கால்–கோளாகவே இக்கருத்தரங்கு கூட்டப் பெற்றது என்று எண்ணிக் கொள்ளுங்கள். இனி அடுத்த ஆண்டிலே ஒரு மாநாடு நடக்கும். அது சமசுக்கிருத எதிர்ப்பு மாநாடு. இந்தியாவைப் பொறுத்த மட்டில் ஆட்சி மொழிகள் மூன்றாகத்தான் இருக்க முடியும். ஆங்கிலம், தமிழ், இந்தி. ஆங்கிலம் எல்லாருக்கும் பொது. தமிழ் தமிழ் நாட்டிற் குரியது. இந்தி இந்தி வழங்குகிற நாடுகளுக்கும், அதை விரும்புகிற நாடுகளுக்கும் பொதுவாக இருக்கட்டும். இந்த மூன்று மொழிகள் தாம் இருக்க வேண்டும். இதுதான் நடுநிலையான முடிபு. ஆங்கிலம் இருந்தே தீர வேண்டும்; இந்தியா முழுவதற்கும் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே இந்தி இங்கு இருக்கவே கூடாது. தமிழும் ஆங்கிலமுந்தாம் இருக்க வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள தொடர் வண்டி நிலையப் பலகைகளிலோ, அரசியல் அலுவலகங்களிலுள்ள

பெயர்ப் பலகைகளிலோ இந்தி எழுத்து இருக்கவே கூடாது. இருப்ப தாக விருந்தால் இந்திய நாடுகளில் (மற்ற மாநிலங்களில்) உள்ள அலுவலகங்களில் உள்ள பலகைகளிலும் தமிழ் எழுத்தும் இருக்க வேண்டும். (நீண்ட கையொலி). அங்குத் தமிழ் இருக்கக் கூடா தென்றால் இங்கும் இந்தி இருக்கக் கூடாது. அந்த நிலைமை வந்தா லொழிய நமக்கு விடிவில்லை. எவ்வளவோ மேலும் மேலும் சொல்லிக் கொண்டே வருகிறோம். மேலும் மேலும் இந்த இந்தியும் நெருங்கிக் கொண்டே வருகிறது. இப்பொழுது யாரும் அதைத் தடுப்பதாயில்லை. அவர்கள் தங்கள் நிலைகளைக் காத்துக்கொள்வதே பெரிதும் இடர்ப்பாடாயிருக்கிறது. எனவே நாம்தாம் எல்லா நிலைகளிலும் விழிப்பாயிருக்க வேண்டும்.

இனி, அடுத்து நடைபெற விருக்கும் சமசுக்கிருத மாநாடு பற்றி யும் கொஞ்சம் சொல்லியாக வேண்டியிருக்கின்றது. நமக்கு சமசுக்கிருதம் தேவையே இல்லை. இந்தச் சமசுக்கிருதத்தைப் பற்றித் தவறான கருத்து பரப்பப்பட்டு வருகிறது. தமிழ் வடக்கே போய்த் திரவிடமானது. திரவிடம் வடமேற்கே போய் ஆரியமாக மாறினது. அந்த ஆர்யத்திலே ஒரு பகுதியினர்–கிரேக்கத்திற்கு இனமான ஒரு மொழியைப் பேசிய ஒரு தொகுதி ஆரியர்கள்தாம்–இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்கள் இந்தியாவிற்கு வந்தவுடன் அவர்கள் பேசிய மொழி வழக்கற்றுப் போய்விட்டது. ஏனென்றால் அவர்கள் ஒரு சிறு கூட்டத்தாராக இருந்ததாலும், அக்கால் வடக்கே இருந்த மக்கள் பேரளவினராக இருந்ததாலும், கடலில் காயம் கலந்தது போல் அம்மொழி ஒன்றுமில்லாமற் போய் விட்டது. அந்த வழக்கற்றுப் போன ஆரிய மொழியுடன், அக்கால் வட இந்தியாவில் வழங்கி வந்த வட திராவிடமொழியான பிராகிருதம் கலந்துதான் வேதமொழி (Vedic Language) ஏற்பட்டது. அந்த மொழியும் பேச்சு மொழியாக இல்லாமல் எழுத்து மொழியாக மட்டுமே இருந்தது. பிராகிருதத்துடன் அந்த ஆரியமொழி கலந்ததால்தான், மேனாட்டு ஆரிய மொழிகளில் உள்ள எகர ஒகரம் இதில் இல்லாமற் போயின. இந்தியிலும் எகர ஒகரம் இல்லை. ஏ, ஓ நெடில்கள்தாம் இருக்கின்றன. அப்படியே வேதமொழியிலும் ஏ, ஓ நெடில்கள்தாம் இருக்கின்றன. மேலும் வேதங்களில் நிரம்பவும் தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன. அதற்குப் பின்னர் ஆரியர்கள் தங்கள் நிலையை மேம் படுத்துவதற்காகவும், வலுப்படுத்துவதற்காகவும் ஓர் இலக்கிய

மொழி வேண்டுமென்று தென்னுடு வந்து பழந்தமிழர்களுடன் பழகி, அவர்கள் மொழியிலுள்ள சொற்களையெல்லாம் தங்கள் மொழியில் கலந்து கொண்டார்கள். அந்த வேதமொழியும் தமிழ் மொழியும் கலந்து செய்த ஓர் இலக்கியமொழி (Literary Language) தான் இந்தச் சமசுக்கிருதம் என்று சொல்லப் பெறும் மொழி. சம்ஸ்க்ருத்–சம் என்ருல் கூட என்று பொருள்; வேறென்றுமில்லை. கூட–கலந்து செய்தது என்பது. ப்ராகிருத் என்ருல் முந்திச் செய்யப் பட்டது என்று பொருள். இந்த வரலாற்றை இப்பொழுது தலை கீழாக மாற்றிச் சொல்கிருர்கள்.

இப்பொழுது வட்டம் என்று தமிழில் இருந்தால் அது வட்ட என்று பிராகிருதத்தில் இருக்கும். சமசுக்கிருதத்திலே விருத்த என்று திரியும். அது இன்னும் Verdo என்றிருக்கும் இலத்தீனிலே. இப்படிப் பார்த்தால் தமிழின் முன்மை நன்கு தெரியும். சமசுக்கிருத மானது ஓர் அரைச் செயற்கை இலக்கியமொழி. (Semi artificial Literary dialect) அதை இப்பொழுது, என்ரே பெருமளவில் வழங்கி வந்த மொழி போலவும், உயிர்மொழி போலவும் சொல்லிக் கொள்வார்கள். அதோடு, அந்த வேத மொழியைக் கூட Vedic Sanscrit என்று சொல்கிருர்கள். அது (Pro-chronism) முற்காலப் படுத்தம் என்னும் குற்றத்திற்கு-வழுவுக்கு இடந்தருவது. அந்தக் காலத்திலே அம்மொழி இல்லவே இல்லை. சமசுக்கிருதம் ஆரிய மொழிகளுக்கெல்லாம் மிக முந்தியது என்று வேறு தவருகச் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். இஃதெல்லாம் 'என் பாட்டன் திருமணத்திற்கு நான் தான் பாட்டுக் கட்டினேன்' என்று சொல்வது போலாகும். (நெடுஞ் சிரிப்பு). ஆகவே, காலமுறைப்படி நாம் ஆராய்ந்து பார்த்தால் சமசுக்கிருதம் இறந்தது மில்லை; பிறந்தது மில்லை. சிலர் அதை இறந்தமொழி என்று சொல்கிருர்கள். அவர்களோ அஃது இறக்க வில்லை; இன்னும் உயிரோடு இருக்கின்றது என்று சொல்லி வருகிருர்கள். அது பிறந்தாலன்ரே இறப்பதற்கு? மொழிக்கு உயிர் என்று சொன்னுல் அது வழங்க வேண்டும். மக்கள் ஒரு கூட்டத்தார் அதைக் கல்லாமலேயே இயல்பாக அதைப் பேசி வர வேண்டும். அப்படி எவன் பேசுகிருன்? சும்மா, ஏதோ காட்டு மடத்திலே ஓட்டாண்டிகள் கூடினது போல, சமசுக்கிருதப் பண்டிதர்கள் சிலர் சேர்ந்து அதைப் பேசி வருவதால் அது உயிருள்ள மொழியாகப் போய் விடுமா? அதுவும் உயிருள்ள மொழி

யென்றால், எல்லாமொழிகளும், உலகத்தில் வழக்கற்றுப் போன மொழிகளெல்லாம் கூட இப்பொழுது பேசப் படத்தான் செய்கின்றன. இலத்தீன் பேசுகிறார்கள்; கிரீக்கு பேசுகிறார்கள். எசுப்பரெண்டோ, நோயல், வலப்புக்கு என்ற செயற்கை மொழிகளையெல்லாம் இப்பொழுது பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆகையினால் நாள்தோறும் வாய்தோறும் பேசுவதினாலே ஒருமொழி உயிருள்ள மொழி என்று ஆகிவிடாது.

சமசுக்கிருதம் ஒரு பாவை (பொம்மை) போன்றது. கடையிலே இருக்கிறதன்றோ பாவை; அஃது என்றைக்காகிலும் பிறந்ததா? என்றைக்காகிலும் இறந்ததா? அது போன்றது இந்தச் சமசுக்கிருதம். அதை வைத்துக் கொண்டு இவ்வளவு பெருமை பண்ணுகிறார்கள். எதனாலென்றால் அந்த அளவுக்கு நாம் அடிமையாகப் போனதனால்தான். இந்த முயற்சிகளையெல்லாம் நாம் தடுத்தே ஆக வேண்டும். தமிழைக் கெடுப்பதற்கென்றே இந்தச் சமசுக்கிருதம் தோற்றுவிக்கப்பெற்றது. என்னுடைய **தமிழர் மதம்** என்னும் நூலிலே கூட அது வழிபாட்டிற்குத் தகாதமொழி என்று நான் சொல்லியிருக்கின்றேன்.

நாம் என்ன செய்ய வேண்டும் என்றால், சொல்கிறேன். சமசுக்கிருதத்திற்கும் தமிழுக்கும் ஆயிரக்கணக்கான சொற்கள் பொதுவாக இருக்கின்றன. அவர்கள் தமிழிலிருந்து அத்தனைச் சொற்களையும் கடன் கொண்டு விட்டு, இப்பொழுது கடன் கொடுத்தவனையே கடனாளி என்கிறார்கள். இதற்கெல்லாம் நம் ஏமாளித்தனந்தான் காரணியம். இப்பொழுது நாம் சில அடிப்படைச் சொற்களை எடுததுக் கொள்வோம், காலம், உலகம் போல. தொல்காப்பியத்திலே ஒரு நூற்பா வருகிறது, கிளவியாக்கத்திலே!

காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

என்பது அது. இந்த நூற்பாவின் தொடக்கத்தில் வரும் காலம், உலகம் இரண்டும் தூய தமிழ்ச் சொற்கள். உலகம் என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள். உலவுதல் என்றால் வளைதல் என்று பொருள். உலாப் போதல் என்று சொல்லப் படுவதில்லையா? அரசன் ஊரை வலமாக வளைந்து வருவதைத்தான் உலாப்போதல் என்பது. உல-என்றால் உருட்சி அல்லது திரட்சி. உலமரல் என்றால் சுழலுதல். உலமரல்தான் அலமரல் என்று திரியும்.

அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி, என்பது நூற்பா. உலவு–உலகு; அம் என்பது ஒரு பெருமைப் பொருள் பின்னொட்டு. இது பெரியதைக் காட்டும். குன்று சிறியது. குன்றம் பெரியது. விளக்கு என்றால் சிறியது. விளக்கம் பெரியது. கலங்கரை விளக்கம் என்று சொல்லவேண்டும். நிலை என்பது Sland. அது Station ஆக இருந்தால் நிலையம் என்று சொல்ல வேண்டும்.

இப்படி, உலகம் என்ற சொல்லை வடமொழியில் எடுத்துக் கொண்டு அதை லோக என்று சொன்னார்கள். அஃது இந்தியிலே லோக் என்று இருக்கிறது. இந்தியில் எப்பொழும் இப்படித்தான். மிக மிகக் குறுக்கி வைத்துவிடுவான். கிருகம் என்று வடமொழியிலிருந்தால் இந்தியில் கர் என்பான். இப்பொழுது என்று தமிழில் இருப்பதைப் படியாதவர்கள் இப்ப என்பார்கள். அது அப் என்று இந்தியில் வழங்குகிறது. இப்படி ஏராளமாகச் சொல்லலாம். இப்பொழுது நேரமில்லை. இப்படி முந்நூறு சொற்களை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தச் சொற்களையெல்லாம் ஓர் அரங்குகூட்டி நன்றாக மூலம் வேரெல்லாம் சொல்லி விளக்க வேண்டும். அதன் பின்னாலே எது முந்தினது தமிழா சமசுக்கிருதமா என்ற முடிவுக்கு வரவேண்டும். இந்தியாவில் மட்டுமில்லை; உலகத்தில் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி; அப்புறம், எவராக விருந்தாலும் சரி. சென்னைப் பல்கலைக் கழகத்திலே சமசுக்கிருதத் துறைத் தலைவராக இருந்த இராகவனாக இருந்தாலும் சரி; இனி, அவருக்குப் பின்னாலிருந்த குஞ்சனிராசாவாக இருந்தாலும் சரி; மேனாட்டில் இருப்பவர்களான பரோ, எமனோ யாராயிருந்தாலும் சரி; அவர்கள் எல்லாரும் வர வேண்டும். நாமும் இந்தத் தமிழ்ப் பேராசிரியர்கள் அத்தனைப் பெயரையும் ஒன்றாகச் சேர்க்க கவண்டும். ஒவ்வொரு சொல்லுக்கும் நான் சொல் வரலாறு சொல்வேன். அவர்களும் (அந்தச் சமசுக்கிருதப் பேராசிரியர்களும்) அவர்கள் கருத்துப்படி அதற்கு விளக்கம் சொல்ல வேண்டும். இருதிறத்தார்க்கும் நடுவாக நம் குடியரசுத் தலைவரைக் கூட வைத்துக் கொள்ளலாம். அல்லது இந்திய உயர்நெறி மன்றத் தலைமைத் தீர்ப்பாளர் கூட இதற்கு நடுவராக இருக்கலாம். கடைசியிலே முடிவாக வேண்டும். இஃது என்ன சொல்; தென் சொல்லா வட சொல்லா என்று. அதற்கப்புறம் ஒருவனும் வாய் திறக்கவே கூடாது. (பெரிய அளவில், கை தட்டல்) இப்படி இல்லா விட்டால் இந்தப் 'பெருமாள்' களெல்லாம் இப்படித்தான் எழுதிக் கொண்டே வருவார்கள். தமிழர்களெல்லாரும் ஒரே கலவையினம்; இந்தத் தமிழ்மொழி சமசுக்கிருதத்திலிருந்துதான் வந்தது' என்று இப்படி! எனவே, அப்படியொரு போராட்ட நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்று கூறி என் உரையை நான் முடித்துக் கொள்கின்றேன். வணக்கம். O

வளர வேண்டும். வளர்ந்தால்தான் தனித்தமிழை, அதன் கொள்கையை வெற்றி நடையிட்டுச் செலுத்த முடியும்.

—சா. சு. மணியம். தேசுமுகிப் பேட்டை.

**0: 385:** ஆரியப் பார்ப்பனரையும், அவர்தம் அடிவருடிகளையும் அஞ்சாது சாடிவரும் அருந்தமிழ் அண்ணலே! வணக்கம். தாங்கள் ஆரிய இனத்தையே இழித்துரைப்பது கண்டு நான் பன்முறை மனம் வருந்தியதுண்டு. கரணியம் அவ்வினத்திலும் நல்லவர்கள் சிலர் இருக்கக்கூடும் என்றெண்ணியே அவ்வாறு வருந்தினேன். ஆனால் சின்னாட்களுக்கு முன்புதான் தங்களின் கூற்று எவ்வளவு உண்மையென்பதையும் எனது மடமையையும் முழுதும் உணர்ந்தேன். என் நண்பரொருவர் உயர்நிலைப்பள்ளியொன்றில் ஆசிரியர். நல்ல தமிழ்ப் பற்றுடையவர். அப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும் கிட்டப்பன் என்னும் பார்ப்பனர் (நான்மேலே கூறிய நல்லவர்களில் இவரும் ஒருவர் என என்னை நம்ப வைத்தவர்) ஒருநாள் என் நண்பரின் கையிலிருந்த **தென்மொழி** யேட்டினைப் பார்த்துவிட்டுத் **தென்மொழி** ஒரு தரக்குறைவான தாளிகை என்றும் அதைப்படிப்பதே கரிசு (பாவம்) என்றும், பெருஞ்சித்திரன் ஒரு மடையனென்றும் பலவாறாக ஏசியதாக என் நண்பர் மிகவும் மனம் வருந்திக் கூறியதைக் கேட்டதும் மனம் திடுக்கிட்டேன். மேலும் அவர், "அப் பார்ப்பனர் பள்ளி நேரத்திலேயே திருவண்ணாமலைக் கோயிலிலும், மற்றும் இராம மந்திரம் போன்ற வழிபாடு நடக்கும் இடங்களுக்கும் போய்த் தாளம் போடுவதும், வகுப்பில்மாணவர்கள் தவறு செய்தால் அவர்களை "அரோராம்" "அரோராம்" என்று 100 முறை எழுது, 200 முறை எழுது என்று தண்டனை அளிப்பதும் தேர்வுத்தாள்களையோ, மற்ற வேலைகளையோ கவனியாமல் எந்நேரமும் "அரோராம்" என்று கூறுவதுமாகத் திரிகிறாராம். இவ்வாறு நடக்கும் ஆ(சி)ரியரால் எப்படிப் பள்ளி உருப்படும் என்றும் மனம் வருந்திக் கூறுகின்றார்.

தாங்களும், தந்தை பெரியார், மொழிஞாயிறு பாவாணர் அவர்களும் பல்லாற்றானும் பணியாற்றியும் இந்தப் பார்ப்பனர்களின் குறும்பு அடங்கவில்லையே! ஐயகோ, தமிழகமே நீ எப்போது விழிப்புறுவாய்? நல்லோர் என்று நான் முழுதும் நம்பிய பார்ப்பனரே இப்படிப்படிப்பட்ட நச்சரவமெனில் மற்றோரைப்பற்றி நினைக்கையிலேயே மனம்.....? —**கோ. பொய்யா மொழி**, திருவருணை (வ.ஆ)

**0: 386:** தங்களின் தமிழ்த்தொண்டு பற்றித் தமிழர் அறிவர். ஆனால் மக்களறிந்த அரசியல் தலைவர்கள் அறிய மறுக்கின்றனர். இன்று தமிழக அரசியலில் பல மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று எண்ணுகிறேன். உரிய காலம் வரை கலைஞர் ஆட்சிக்கு நாம் ஆக்கம் தேடலாம்! ஆனால் அறிஞர் அண்ணா தமிழ் பற்றியும், தமிழர் பற்றியும், தமிழ் இனம் பற்றியும் கண்ட தமிழ்நாடு அமைக்க வேண்டுமானால், அவருக்குப்பின் இனிச்செயலாற்ற வேண்டிய திறமையைப் பெற்றிருப்பவர் ஒருவர்தாம். அவர் இன்று பலருக்குப் புலவராகக் காட்சியளிக்கலாம்! அவர் நடத்தும் மாநாடு புலவர் மாநாடாகக் கூட காட்சியளிக்கும்! ஆனால் அவர்கள், அவரைப் புரவலராக உலாவரும் காட்சியை ஒரு நாள் படம் பிடித்துத்தான் ஆகவேண்டும். நாடோடிகளாக உலகெங்கும் அலைந்தவர் 'இசுரேல்' என்று ஒரு நாட்டை அமைத்துக் கொண்டபொழுது, நாடோடிகளாக இங்குவந்-

தோர் நம்மை ஆளவிடுவதா? என்பதை இனித் தமிழர் முற்றிலும் உணர்ந்து செயல் படவேண்டும். கலைஞர் அரசியல் மேம்பாட்டில் வல்லவராக இருக்கும் இந்நாளில் நாம் அண்ணா அவர்களின் கொள்கைகளை நிறைவேற்றப் பாடுபடவேண்டும். நாட்டு ஒருமை பேசி, 'ஓநாய், நானும் ஆட்டை விழுங்கியதால் இருவரும் ஒன்று-யிணைந்தோம்' என்றவாறு ஆகிவிடக் கூடாது என்பதில் அண்ணா கண்ட தமிழ்க் கொள்கையை இனி தங்கள் வழியில்தான் தமிழகம் காண இயலும் என்று நம்புகிறேன். அதற்காக வேண்டி பக்கங்களைக் குறைத்தேனும் 'கிழமை' இதழாகத் தென்மொழியை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—செ. வெற்றிவேந்தன். பட்டணம். இராசிபுரம்.

**0: 387:** தகைமைசால் பெரியீர், வணக்கம். தங்களின் தென்-மொழி சுவடி: 11, ஓலை: 2 படிக்கும் பேறு கிட்டியது. இதழின் பக்கம் ஒவ்வொன்றையும் பயன்உள்ள வகையில் எழுதியுள்ள பாங்கு எம்மைப் பெரிதும் கவர்ந்தது. இனி வரும் தென்மொழி இதழை வாங்காமல் இருப்பதில்லை எனச் சூளுரை எடுத்துக் கொண்டேன். "மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை" என ஒவ்வொரு தமிழ் மகனும் தோள் உயர்த்தி நிற்கும் காலத்தை எண்ணி நொடிமேல் விழி வைத்து எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றேன். எத்தனைதான் எடுத்துரைத்தாலும் நம்மோன் தன் இழிநிலை போக்கி ஏற்றம் கொள்பவனாகக் காணோம். நம்மவர்கள் ஏற்றம்பெற உங்களைப் போன்ற பெரியோர்களின் பணி மேலும் மேலும் மிகுதியாகத் தேவைப்படுகிறது. அடுத்து மடல் 376-இல் திரு. ஈழத்து அடிகள் அவர்கள் அவரின் வறுமை குறித்துத் தங்களுக்கு எழுதியிருக்கின்றார்கள். அதைப் படித்தவுடன் நான் மிகவும் வருத்தப் பட்டேன். அவருக்கு, தென்மொழியின் சார்பாக உருபா. இரண்டாயிரம் கொடுத்துள்ளதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இவரின் நிலைமையை நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று உதவி பெற்றுத் தர தென்மொழி முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது எனது அவா.

—தொண்டைமான். வாலாசாபாது.

**0: 388:** தங்கள் அறிவும், ஆற்றலும் தமிழரின் தகுதியை அரிமாப் பண்பை எதிரிகட்குக் காட்டிக் கொடுக்கும் கருவிகளாகி விட்டன. எப்படி எனில், தமிழ் மறம் தனித்தமிழ் நாடு என்ற 'மறவுணர்வை' எழுப்பி அதன் வழி எழுச்சியுற்று வரும் 'இளைஞர் இவரென'ப் பட்டம் கட்டி அவர்களை எதிரிகள் இனங்கண்டு கொள்ள வழி செய்து விடுகின்றீர்கள். பார்ப்பான் எவன்? அவன், உழைப்பும் பொருள் பெருக்க உறவும் இல்லாதவன். இவனை ஓரினமாகக் காண்பதா? கூடாது. ஓர் அகவமாகக் காணுதல் வேண்டும். அவனை ஒழித்துக் கட்டுதல் என்பது, முதலாளிய, நிலவுடைமை எச்சங்களை நொறுக்குவதாலேயே முடியக் கூடியதாம். தமிழர் என்றால் அவர் தமிழரைச் சுரண்டுவதை எப்படி எதிர்க்காமல் இருக்கலாம். தங்களின் ஆற்றலை வீணடிப்பதாகவே, என் அண்மைக்கால அடைவுகள் எனக்குப் புலப்படுத்தின. —பறம்பை அறிவன்-பறம்புக்குடி.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.